நிர்மாணம்

மகாத்மா காந்தி
எழுதியது

மொழிபெயர்ப்பாசிரியர்
ரா. விநாயகம், எம்.ஏ., பி.எல்.

நவயுகப் பிரசுராலயம்

ஜார்ஜ் டவுன் :: சென்னை

நிர்மாணம்

~~நிர்மாணத் திட்டத்தின்~~ அதன்
பொருளும் அவசியமும்

945

5-3-42

மகாத்மா காந்தி

எழுதியது

நவயுகப் பிரசுராலயம்

ஜார்ஜ் டவுன் :: சென்னை

சென்னை பி. என். பிரஸ்ஸில்
அச்சிடப்பெற்று, மகாத்மா
காந்தியின் அநுமதியுடன்
வெளியிடப் பெற்றது

விலை நாலு அணா

௧. நிர்மாணம்

நிர்மாணத் திட்டம் என்பதைப் பூர்ண சுயராஜ்ய நிர்மாணம், அல்லது சத்தியத்தையும் அஹிம்சையையும் கொண்ட வழிகளில் பூர்ண சுதந்திர நிர்மாணம் என்றே சொல்லலாம். அப்படிச் சொல்வது அதிகப் பொருத்தமாயும் இருக்கும்.

பலாத்காரத்தின் மூலம் சுதந்திரத்தை நிறுவினால் சத்தியத்தைக் காப்பாற்ற இயலாது. இந்த முறையின் விளைவை நாம் கண்கூடாகப் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இன்று நடக்கும் உலக யுத்தத்தில் தினசரி எவ்வளவோ செல்வமும், எத்தனையோ உயிர்களும் பலியாவதுடன், சத்தியமும் காற்றில் பறந்துவிடுகிறது. கோரிய சுதந்திரந்தான் கிடைக்குமென்றாவது, அல்லது கிடைத்தால் தங்குமென்றாவது நிச்சயம் சொல்வதற்கில்லை.

சத்தியம் அஹிம்சை என்ற இவ்விரு சாதனங்களினால் ஏற்படும் சுதந்திரம் நாட்டில் உள்ள யாவருக்கும் சுதந்திரத்தை அளிக்கும். பணக்காரனுக்கு ஏழைக்கும், ஒரு ஜாதி அல்லது மதத்தில் உள்ளவனுக்குப் போல மற்றொரு ஜாதி அல்லது மதத்தில் உள்ளவனுக்கும் அளிக்கும். சிலருக்குத்தான், சிலருக்குக் கிடையாது என்பது இல்லை. இதுதான் லட்சியம். அனுஷ்டானத்தில் நமக்குக் கிடைத்திருப்பதோ, அல்லது கிடைக்கப்போவதோ, இந்த லட்சியத்திலிருந்து குறைவுபட்டதாக இருக்கும். இதனால் லட்சியம் அவசியமில்லை என்று முடிவு கட்டலாகாது. க்ஷேத்திர கணிதத்தில் உலகப் பிரசித்தி பெற்ற ஆசிரியர் ஈக்லிட் (Euclid) என்பவர் ‘கோடு’ என்பதன் லட்சணத்தைக்

குறிப்பிட்டிருக்கிறபடி* பார்த்தால், நம்மில் எவ்வளவோ திறமைசாலியா யுள்ளவன் போடுகிற கோடும் அதற்குக் குறைவாகவே தோன்றும். இதனுல் கோட்டிற்கு லட்சணம் வேண்டியதில்லை யென்ருே, அல்லது அந்த லட்சணத்திற்குக் ~~குறைவாக~~ பொருந்தாமல் இழுக்கப்படும் கோடு உபயோகமில்லை யென்ருே தீர்மானித்து விடுவதில்லை. அப்படியே பூரண சுதந்திரம் என்னும் லட்சியத்திற்கு எவ்வளவு ~~நெருங்கி~~ ~~சுத்தில்~~ நம் அனுஷ்டானம் ~~செல்கிறதோ~~ நெருங்குகிறதோ, அந்த அளவு நமக்கு வெற்றி. இப்புத்தகத்தை வாசிப்போர் காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்தைப் பூர்த்தியாக மனத்தில் கற்பனை செய்து பார்க்கவேண்டும், அது பூரணமாக நிறைவேறினல் அதுவே நாம் ~~கோரும்~~ எதிர்பார்க்கும் சுதந்திரமாக அமைந்துவிடும் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்வார்கள். இந்தியா மந்திரி மிஸ்டர் ஏமெரி, அரசியல் கட்சிகள் எல்லாம் ஒரு பொதுவான சமரச அறிக்கை சமர்ப்பித்தால், அதைத் தாம் கௌரவிப்பதாகச் சொல்லுகிருர். நான் என்ன சொல்லுகிறேன்? அவ்வித அறிக்கை சமர்ப்பிக்கக் கூடிய ஒற்றுமை உணர்ச்சியை, நம் மக்கள் அஹிம்சா முறையில் மனப்பூர்வமாக வளர்த்தால், அவர்களுடைய கோரிக்கைகளை எவரும் நிராகரிக்க முடியாது. அவ்வித ஒற்றுமை எதையும் வென்றுவிடும். மிஸ்டர் ஏமெரியின் நோக்கத்தைப் பற்றி சர்ச்சை செய்யவேண்டிய அவசியமே இல்லை.

இனி, பலாத்காரத்தினுல் கிடைக்கக்கூடிய சுதந்திரத்தைப்பற்றிச் சற்று பார்ப்போம். இம்முறையில், மேலே சொன்னபடி நாட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் பூரண சுதந்திரம் கிடைக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், இம்முறையில் எவன் சுதந்திரம் அடைவதற்கு அதிக பலாத்காரம் கொடுத்து உதவினனே, அவன் கை

* அகலமின்றி நீளம் என்பதுதான் ஈக்லிட் கோட்டிற்குக் காட்டிய லட்சணம்.

மாக, ஜனப் பிரதிநிதியாக ஓங்கும். இம்முறையின் கீழ் ஜனங்களின் ஆதரவு இல்லாத (பொருளாதாரத்துறையிலும் அதிகாரத்தையும் நிர்வயிலும் சரி) அடைய முடியாது.

ஆனால் வருஷமாக இத் திட்டத்தின் அவசியத்தை உணர்வதற்கு, நான் பலாத்காரத்தைப்பற்றி மேலே சொன்ன கருத்தை ஒப்புக்கொள்ளவேண்டும் என்பதுகூட அவசியமில்லை.

இனி இத்திட்டத்தின் அம்சங்களை ஒவ்வொன்றுகப் பார்ப்போம்.

II

1. மத ஒற்றுமை

இந்த ஒற்றுமை அவசியம் என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்கிருர்கள். எல்லோரும் ஒப்புக்கொள்ளாதது என்னவென்றுல், இது வெறும் அரசியல் ஒப்பந்தத்திஞல் ஏற்படக் கூடியதல்ல என்பதுதான். அரசியல் ஒப்பந்தம் என்பது மக்களின் மேல் சுமத்தப்படுகிற காரியம். ஒற்றுமை கலங்காத இதய ஒருமைப்பாட்டிஞல்தான் ஏற்படும். இதை எப்படி அடைவது? காங்கிரஸ்காரர் ஒவ்வொருவரும், தாம் எந்த மதத்தினராயிருந்தாலும், நாட்டிலுள்ள பல்வேறு மதங்களின் உயிர்த் தத்துவங்களை, பொதுவான கோட்பாடுகளை, சாராம்சத்தை, தம்முடையதாக்கிக் கொள்ளவேண்டும். நாட்டில் உள்ள கோடிக் கணக்கானவர்களில் ஒவ்வொருவருடனும், தம்முடைய ஐக்கிய பாவத்தை உணரவேண்டும். காங்கிரஸ்காரர் ஒவ்வொருவரும் இதர மதத்தினர்களுடன் நட்புக் கொள்ளவேண்டும். தம்முடைய மதத்திற்கு எவ்வளவு மதிப்பு செலுத்துகிருரோ அவ்வளவுமதிப்பு இதரமதங்களிடமும் செலுத்தவேண்டும்.

அப்பொழுது, ‘இந்து - பானீ’ என்றும், ‘முஸ்லிம் - பானீ’ என்றும், ‘இந்து - சா’ என்றும், ‘முஸ்லிம் - சா’

என்றும் ரயில்வே பிளாட்பாரங்களி◦ நம்மில் எவ்வளவோ நம்மை வெட்கித் தலைகுனியச் செய்கிற கோடும் அதற்குக் கூடங்களிலும், கலாசாலைகளிலுமல் கோட்டிற்கு லட்ச. இந்துக்கள் அல்லாதவர்களுக்கென்று அல்லது அப்க வசதிகள் செய்யவேண்டியதில்லை. இம்மாறுதலே ஒரு பெரிய புரட்சியாகும். ஆனால், இம்மாறுதல் ஏற்படுவதற்கு, காங்கிரஸ்காரர்கள் மேற்சொன்ன முறையை, அரசியல் சௌகரியங்களை உத்தேசிக்காமல், அதுவே சரி, அதுவே தருமம் என்ற உணர்ச்சியில், கடைப்பிடிக்கவேண்டும். அப்படிச் செய்தால் அரசியலிலும் ஒற்றுமை இயற்கையாகவே உண்டாகும்.

இவ்விதம் இதய பூர்வமான ஒற்றுமை ஏற்படவேண்டுமென்றால், அதற்கு இடையூறான காரியம் எதையும் காங்கிரஸ்காரர்கள் மேற்கொள்ளக் கூடாது. அக்காரியம் எவ்வளவு முக்கியமாயிருந்தாலும், எவ்வளவு கவர்ச்சிகரமாயிருந்தாலும், வேண்டாமென்று தள்ளித்தான் ஆகவேண்டும். உதாரணமாக, நம்முடைய நாட்டில் கட்சிகள் மதவாரியாக அமைந்திருக்கும் வரை, காங்கிரஸ்காரர்கள் சட்டசபை வேலையையோ, அரசியல் நிர்வாகத்தையோ மேற்கொள்ளக்கூடாது. மத ஒற்றுமை நிலவும் வரை நிர்வாகப் பொறுப்பைத் தூர ஒதுக்கிவைத்துவிட வேண்டும்.

தேச சேவைக்கு அவசியமான சக்தியும் செல்வாக்கும் சட்ட சபையில்தான் உண்டு என்று வெகு நாளாக நாம் எண்ணி வந்திருக்கிறோம், இது தவறு. ஒருவித மனச் சோம்பலினாலோ, மன மயக்கத்தினாலோதான் இந்த எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். ஆங்கிலேயரின் சரித்திரத்தை மேலெழுந்தவாரியாகப் படித்ததின் பயனாக, சட்ட சபையிலிருந்துதான் ஜனங்களுக்குப் பலம் கிடைக்கிறது என்று எண்ணிவிட்டோம். ஆனால், உண்மை என்ன? ஜனங்கள்தான் அதிகாரத்திற்குப் பிறப்பிடம். இந்த அதிகாரம் அவ்வப்போது தாற்காலிக

மாக, ஜனப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப் படுகிறது. ஜனங்களின் ஆதரவு இல்லையென்றால், சட்டசபை எந்த அதிகாரத்தையும் நிர்வகிக்க முடியாது. சென்ற இருபத்தொரு வருஷமாக இந்த ஒரு உண்மையைத்தான் நம் மக்கள் உணரவேண்டுமென்று நான் முயற்சி செய்து வந்திருக்கிறேன். சட்டமறுப்பு என்பது சக்திக்கு உறைவிடம். ஒரு தேசத்திலுள்ளவர்கள் அனைவரும், தங்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை மீறிவிடுவதென்றும், அப்படி மீறுவதனால் ஏற்படும் பலனை அனுபவிப்பதென்றும், முடிவு செய்துவிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்போது சட்டசபையும் சர்க்கார் நிர்வாகிகளும் என்ன செய்ய முடியும்? அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட வேண்டியதுதான். போலீஸ் ராணுவம் முதலியவற்றின் உபயோகமெல்லாம் ஓரளவில்தான். நாட்டில் ஒரு சிலரை அடக்கிவைக்கத்தான் அவைகளால் முடியும். அச்சிலர் எவ்வளவு செல்வாக்கு உடையவர்களாயிருந்தாலும், அவர்களை அடக்கிவிடலாம். ஆனால் நாட்டிலுள்ளோர் அனைவரும் வைராக்கியமடைந்து, எதற்கும் தயாராகக் கிளம்பிவிட்டால், அவர்கள் சக்தியைப் போலீஸும் தடுக்க முடியாது, ராணுவமும் தடுக்க முடியாது, எதுவும் தடுக்க முடியாது.

ஜனநாயகம் என்ற முறையின் கீழ், நிர்வாகம் ஒழுங்காக நடைபெற வேண்டுமானால், நாட்டில் பெரும்பான்மையோர் ஒப்புக்கொண்டு தீர்மானித்த விஷயங்களுக்கு நாட்டில் உள்ளவர் அனைவரும் கட்டுப்பட வேண்டும். வேறொரு வகையாகப் பார்த்தால், அதிகமான வேறுபாடுகளோ வித்தியாசங்களோ இல்லாத சமுதாயத்தில்தான் ஜனநாயக முறை சரிவர நடைபெறும்.

ஆனால், இந்தியாவில் நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம்? தனித் தொகுதிகள் என்று, இல்லாத வேறுபாடுகளையும் ஏற்படுத்திக்கொண்டு, அவற்றின் மூலம் ஜனநாயக

முறையில் வெற்றியடைந்து வருவதாக மனப்பால் குடித்துக்கொண்டிருக்கிறோம். இந்த வேறுபாடுகள் இருந்து வரும்வரை, நான் மேலே குறிப்பிட்ட இதய பூர்வமான ஒற்றுமையை - சமரசத்தை - அடைய முடியாது. ஒரே சட்ட சபையில் புகுந்துவிட்டோம் என்பதனாலேயே, ஒற்றுமை கிடைத்துவிடாது. சட்டசபை நடக்கிறது என்ற திருப்தியைத் தவிர, ஜனங்களுக்குப் பயன் ஏற்படாது. ஆளும் வர்க்கத்தார் இடும் பிச்சைக்குப் போட்டி போடவும், பங்கிட்டுக்கொள்ளவும் ஒரு குஸ்தி மண்டபமாகத்தான் அது அமையும். ஆளும் வர்க்கத்தார் போலீஸ் மனப்பான்மையைத்தான் கொண்டிருக்கிறார்கள். கட்சிகள் சண்டையிட்டுக்கொள்ளும்போது, இருதரத்தாரையும் அடக்கிக் கொண்டிருப்பார்கள். இந்த வெட்கக் கேடான நிலைமையில் சட்டசபையின் மூலம் பூரண சுதந்திரம் கிடைத்துவிடுமென்று நான் நம்பவில்லை.

2. தீண்டாமை விலக்கு

இந்து மதத்திற்கு ஏற்பட்டிருக்கும் இச்சாபத்தை - தீண்டாமை என்னும் இந்த அபவாதத்தை - நீக்கித்தான் ஆகவேண்டுமென்று இன்னும் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. காங்கிரஸ்காரர்கள் இது விஷயத்தில் நல்ல வேலை செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்கள் வேலையில் நான் கண்ட ஒரு குறையைச் சொல்லிக்கொள்ள வேண்டும். அவர்களில் பெரும்பாலோருக்கு நோக்கம் உயர்ந்ததாயில்லை. ஏதோ அரசியல் அபிலாஷை நிறைவேறுவதற்கு இவ்வேலையை, இந்த சேவையை, ஒரு தவிர்க்க முடியாத நிர்ப்பந்தமாகத்தான் அவர்கள் கொண்டார்கள். இது தலை சிறந்த தருமம், இந்துக்கள் என்பவர்களுக்கெல்லாம் ஏற்பட்ட இன்றியமையாத கடமை, இதைச் செய்து முடிக்காவிட்டால் இந்து தர்மமே நிலைகுலைந்து மறைந்துவிடும் என்று அவர்கள் சங்கல்பம் செய்து

கொள்ளவில்லை. இவ்விதம் அவர்கள் நினைத்து, காரியத்தை மேற்கொண்டிருந்தார்களானால், சநாதனிகளையெல்லாம் மாற்றித் தங்கள் நியாயத்தை ஒப்புக்கொள்ளச் செய்திருக்கலாம். ஆனால் தாங்கள் ஏற்றுக்கொண்ட அஹிம்சா முறைக்கு ஒப்ப, சநாதனிகளிடம் யுத்தக் கோலத்துடன் பிரசன்னமாகாமல், நட்பு முறையில் செல்லவேண்டும். இனி, ஹரிஜனங்களிடம் அவர்கள் எப்படி நடந்துகொண்டிருக்க வேண்டும்? இந்து சமூகத்தினராகிய நாம் இவர்களைப் பல நூற்றாண்டுகளாக ஒதுக்கி வைத்துவிட்டோம். வகையில்லாமல் அவர்களை விட்டுவிட்டோம். உலகத்தில் எந்த இடத்திலும், எந்தக்காலத்திலும், இக்கொடூரத்திற்கு ஈடு கண்டுபிடிக்க முடியாது. ஆகவே, மேல் ஜாதி இந்துக்கள் தாமாக அவர்களிடம் சென்று, கைலாகு கொடுத்து, அவர்களைத் தங்களுடன் சரியாசனத்தில் அமர்த்திக் கொள்ளவேண்டும். உற்ற நண்பர்களாக அவர்களிடம் நடந்துகொள்ளவேண்டும். அனுஷ்டானத்தில் இது எவ்வளவு சிரமம் என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்திருக்கிறேன். ஆனால் சுயாட்சி என்னும் மாளிகையை நிர்மாணிப்பதற்கு இதையும் மேற்கொண்டே ஆகவேண்டும். நாம் கோரும் லட்சியத்தை அடைவதற்கு முன் பலவிதமான இடையூறுகளும் எதிர்ப்படும். கரடும், முரடும், மேடும் பள்ளமும் கடந்துதான் செல்லவேண்டும். உடலுறுதியும், மனோதிடமும் இருந்தால்தான், சுதந்திரம் என்னும் சிகரத்தை அடைந்து அங்குள்ள நிர்மலமான ஆகாயத்தை சுவாசிக்கலாம்.

3. மதுவிலக்கு

மத ஒற்றுமை, தீண்டாமை விலக்கு இவைகளைப் போல் மதுவிலக்கும் சமூக சீர்திருத்தத்திற்கு இன்றியமையாததாகும். அவைகளைப் போல் இதுவும் 1920-ம் வருஷத்திலேயே காங்கிரஸ் நிர்மாணத் திட்டத்தில் ஸ்தானம்

பெற்றுவிட்டது. அஹிம்சை என்ற சாதனத்தின் மூலம் நாம் சுதந்திரம் அடையவேண்டுமானால், மதுவிலக்கைப் பிற் காலத்தில் வரும் சர்க்கார் கவனித்துக் கொள்ளட்டும் என்று விட்டு வைக்கலாகாது. குடிப் பேயினால் பீடிக்கப் பட்டிருக்கும் லட்சக்கணக்கான மக்களின் க்ஷேமத்தை எக்காரணம் பற்றியும் ஒத்திப்போடக் கூடாது.

டாக்டர்களும் வைத்திய ஆராய்ச்சியாளர்களும் இந்த சேவையில் நல்ல உதவி செய்யலாம். குடிகாரர்களை அக் கொடிய பழக்கத்தினின்றும் மாற்றுவதற்கு வேண்டிய மார்க்கங்களை அவர்கள் கண்டுபிடித்துக்கொடுக்கவேண்டும்.

மாதர்களும், மாணவர்களும் மதுவிலக்குத் தொண்டில் கலந்துகொள்வதற்கு விசேஷ சௌகரியங்கள் இருக்கின் றன. குடிப்பழக்கமுள்ள ஏழைகளுக்கு அவர்கள் பல விதத்திலும் உதவிபுரிந்து அவ்வேழைகள் அன்புக்கும் அபிமானத்திற்கும் பாத்திரமாகிவிட்டால், அப்பழக்கத்தி னின்றும் அவர்களை விடுவிப்பது சுலபமாகிவிடும்.

காங்கிரஸ் கமிட்டியார் நல்ல சாவடிகள் அமைத்து, உழைத்துக் களைத்து வரும் தொழிலாளி சிரமபரிகாரம் செய்துகொள்ளவும், ஆரோக்கியமான சிற்றுண்டியை மலி வாகப் பெறவும், அவனுக்கு ஒத்த விளையாட்டுக்களில் கலந்துகொள்ளவும் ஏற்பாடு செய்யலாம். இவ்விதமான சேவைகளில் காங்கிரஸ்காரர்களுக்கு, கவர்ச்சியுடன் மன உல்லாசமும் ஏற்படும். அஹிம்சையின் மூலம் சுதந்திரம் பெறுவது என்பது நவீன முறை. அஹிம்சையில் பழைய முறைகளை விட்டுப் புது முறைகளைக் கையாளவேண்டும். பலாத்கார முறையில், நிர்மாண வேலைக்கு அவசியமில்லை. பலாத்கார முறையைப் பின்பற்றுபவர்கள், சீர்திருத்த வேலையெல்லாம் பின்னால் பார்த்துக்கொள்ளலாமென்று விட்டுவிடுகிறார்கள். இவ்வியல்பு, அவசர புத்தியைக் காட் டுவதுடன் அறியாமையையும் காட்டுகிறது என்பது என் கருத்து. உண்மையான விடுதலை, என்றும் நிலைத்திருக்கும்

விடுதலை, மனத் தூய்மையினுல்தான் உருவகமாக வேண்டும் என்பதை அவர்கள் மறந்துவிடுகிருர்கள்.

4. கதர்

கதரைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் உண்டென் பதை நான் அறிவேன். நான் கதரை ஆதரிப்பது விருதா வான வேலை யென்றும், எதிர் நீச்சுப்போடுகிற காரியம் தான் என்றும், இதனுல் சுதந்திரப் போராட்டத்திற்கே இடையூறு விளைகிறதென்றும், இதன் மூலம் நாகரிகம் குறைந்திருந்த பழங் காலத்தின் முறைகளுக்குத் திரும்பிப் போகத்தான் முயற்சிக்கிறேன் என்றும் பலர் எண்ணுகிருர் கள். இச்சிறு நூலில் கதருக்குச் சாதகமான கட்சிகளை யெல்லாம் எடுத்துச் சொல்ல எனக்கு இயலாது. கதர் விஷயமாக காங்கிரஸ்காரர் ஒவ்வொருவரும், இந்தியர் ஒவ்வொருவரும், என்ன செய்து அதை விருத்தியாக்கலாம் என்பதையே இங்கு சொல்ல விரும்புகிறேன். பொரு ளாதார உலகில் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் ஸ்தா பிப்பதற்குத்தான், கதர் இயக்கம் முயற்சிசெய்கிறது. உண வின் ருசியை உண்ணும் போதே காணலாம். அது போல், கதரைப்பற்றி நான் சொல்லும் அருமைகளை யெல்லாம் அவரவர்களும் தாங்களே அனுபவத்தில் கண்டுகொள்ள லாம். ஆனுல் அவர்கள் கதரை அதனுடைய சகல தத்து வார்த்தங்களுடனும் ஏற்றுக்கொள்ள வேண்டும். சுதேசி யத்தின் பரிபூரண மலர்ச்சிதான் கதர்இயக்கம். வாழ்க்கைக் குத் தேவையான சகல பொருள்களும் இந்தியாவிலேயே உற்பத்தியாக வேண்டும். அதுவும் கிராமவாசியின் அறிவும் உழைப்பும் கலந்த தொழிலில் உற்பத்தியாகவேண்டும். இப் போது இருக்கும் உற்பத்தி முறை அடியோடு மாற வேண் டும். நம் நாட்டிலுள்ள 7 லட்சம் கிராமங்களைச் சூறை யாடி, அதன் மூலம் இங்கிலாந்திலும், இந்தியாவிலுமே, சில நகரங்கள் கொழிக்கவேண்டும் என்பது இப்போதைய

முறை. இது மாறி, நாட்டில் ஒவ்வொரு கிராமமும் தனக்குத் தேவையான பொருள்களை முதலில் உற்பத்தி செய்து செலவு செய்துகொள்ள வேண்டும். தேவைக்கு மேல் மிகுந்ததை இந்தியாவிலும் வெளியேயும் உள்ள நகரங்களுக்கு சப்ளை செய்ய வேண்டும். உற்பத்தி செய்வோரும் உபயோகிப்போரும் இருதரத்தாரும் சாதகமடையவேண்டும். இதுதான் கதரை ஆதரிக்கும் புதிய முறை.

ஆனால் இம்முறை சித்தியாவதற்கு, நாட்டில் பலருடைய மனப்பான்மையிலும், விருப்பு வெறுப்புக்களிலும் ஒரு பெரிய மாறுதல் ஏற்படவேண்டும். அஹிம்சை முறை என்பது சில விதங்களில் சுலபமாகவும், வேறு சில விதங்களில் கடினமாகவுமே அமைந்திருக்கிறது. இது ஒவ்வொரு இந்தியனின் வாழ்வையுமே மாற்ற முயற்சிக்கிறது. இதன் மூலம், ஒவ்வொருவனும் தன்னிடம் இதுவரை மறைந்து கிடந்த சக்தியைக்கண்டறிந்து ஆனந்தமுறவேண்டும். சமுத்திரத்திற்கும் அதிலுள்ள ஒவ்வொரு துளிக்கும் உள்ள சம்பந்தத்தைப் போல், ஒவ்வொருவனும், இந்திய சமுதாயமும் தானும் ஒன்று என்பதை உணர்ந்து, அவ்வுணர்ச்சியினால் ஒரு பெருமை அடையவேண்டும். இந்த அஹிம்சை, நாம் நம் நாட்டின் ஆதிகாலம் தொட்டு சரித்திரவாயிலாகக் கேட்டு அறிந்த சாரமற்ற சரக்கல்ல. மனித வர்க்கமே இதுவரை கண்டறிந்திராத மகா சக்தி இது. மனித வர்க்கத்தின் பிற்கால வாழ்வு மர்மம் எல்லாம் இதில்தான் அடங்கிக் கிடக்கிறது. இவ்வரிய சக்தியைத்தான் நான் காங்கிரஸுக்கும், அதன் மூலம் உலகத்திற்குமே, எடுத்துக் காட்ட முயற்சித்திருக்கிறேன். கதரென்பது இந்திய சமுதாயத்தின் ஒற்றுமைக்கும், அதன் சுதந்திரத்திற்கும் சமத்துவத்திற்கும் சின்னம். இதை எண்ணித்தான் பண்டித ஜவாஹர்லாலும் கதர் ‘ இந்தியர் விடுதலையைக் குறிக்கும் வீர உடை ’ என்று சொல்லுகிறார்.

தேவையான பொருள்களை, தேவையான இடத்தில் உற்பத்தி செய்து, உபயோகித்துக்கொள்வது, (Decentralization of production and distribution) என்பதுதான் கதரை வளர்க்கும் தன்மை. இந்தப் பொருளாதாரத் தத்துவத்தை ஒட்டி நாம் போட்டுக்கொண்டிருக்கும் திட்டம் என்னவென்றால், இப்போதைக்கு, ஒவ்வொரு கிராமமும் தனக்குத் தேவையான பொருள்களுடன், நகரங்களுக்குத் தேவையானதில் ஒரு பங்கும், உற்பத்தி செய்யவேண்டும் என்பது.

கிராமத் தொழிலுக்கே அவசியமான சாமான்களையும், கிராமத்தில் உற்பத்தி செய்ய முடியாதவைகளையும், (Heavy Industries) பெரிய ஆலைகளில் பொதுவாகத்தான் உற்பத்தி செய்யவேண்டும். சர்க்காரே அவைகளை உற்பத்திசெய்து விநியோகித்துவிடலாம். தேசம் பூராவும் கிராமங்களில் வளரும் தொழில்களின் அளவே ~~பிரமாதமா~~ யிருக்கும் பொழுது, ஆலைத் தொழிலின் அளவு மிகச் சுருக்கமாய்த் தான் இருக்கும். (பெரும்பாலான உற்பத்தி கிராமத் தொழில்களின் மூலமே ஏற்படும்.)

இதுவரை கதரின் தத்துவார்த்தங்களைப் பார்த்தோம். இனி, இதன் அபிவிருத்திக்குக் காங்கிரஸ்காரர்கள் என்ன செய்யவேண்டும் என்பதைப் பார்ப்போம். கதர் உற்பத்தியின் அம்சங்கள் பின்வருமாறு: பருத்தி பயிர் செய்தல், பறித்தல், அரைத்தல், பஞ்சைச் சுத்தம் செய்தல், பட்டை போடுதல், நூற்றல், கஞ்சி போடுதல், சாயம் போடுதல், தறிக்குப் பாவு ஊடு முதலியன தயார் செய்தல், நெய்தல், சலவை செய்தல். இவற்றில் சாயம்போடுதலைத் தவிர மற்ற யாவும் தொழிலுக்கு இன்றியமையாத அம்சங்கள். இவற்றில் ஒவ்வொன்றையும் கிராமத்தில் திறமையாகச் செய்து முடிக்க முடியும்; அகில இந்திய சர்க்கா சங்கத்தாரின் மேற்பார்வையிலிருக்கும் கிராமங்களில் அப்படியே செய்யப்பட்

டும் வருகின்றன. இது சம்பந்தமாக, 1941-ம் ஒடுத்திய புள்ளி விவரங்களை அடியில் கண்டுகொள்ளலாம் :

நூற்போர், நெய்வோர் முதலியோருடைய எண்ணிக்கை 2,75,146. இவர்களில் ஹரிஜனங்கள் 19,645; முஸ்லிம்கள் 57,378. கதர் உற்பத்தி செய்யும் கிராமங்கள் 13,451. தொழிலாளிகளுக்குக் கூலியாக வழங்கப்பட்ட ரூபாய் மொத்தம் 34,85,609. நூற்போரில் பெரும்பான்மையோர் பெண்கள்.

ஆனால், காங்கிரஸ்காரர்கள் உண்மையாகவே சிரத்தையுடன் இத்தொழிலை வளர்க்க முன் வந்தால், இப்போது நடக்கும் வேலையை நூறு மடங்கு விரிவாக்கலாம். ஏற்கெனவே நம் நாட்டுக் கிராமங்களிலெல்லாம், இத்தொழிலும் இதற்குத் துணையான இதர கைத்தொழில்களும் ஓங்கி வளம் தந்தவைதான். மேல் நாட்டு வர்த்தகர்களின் கொடுமைகளினால் இவைகள் நாசமடைந்த பின், நம் கிராம வாசிகளிடமிருந்து அறிவும் ஆனந்தமும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. இன்று நாம் காணும் கிராமத்தாருக்கும் அவர்கள் பராமரித்து வரும் கால்நடைகளுக்கும் அதிக வித்தியாசமில்லை என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

கதர் சம்பந்தமாக, காங்கிரஸின் கொள்கையைக் காங்கிரஸ்காரர்கள் அனுஷ்டிக்க விரும்பினால், அவர்கள் அகில இந்திய சர்க்கா சங்கத்தார் அவ்வப்போது வெளியிடும் அறிக்கைகளையும் குறிப்புகளையும் அமுலுக்குக் கொண்டு வரவேண்டும். நானும் இங்கே சில பொதுவான விதிகளைக் குறிப்பிடுகிறேன் :

1. சொந்தத்தில் நிலமுடைய ஒவ்வொரு விவசாயியும், குடும்பத்திற்கு வேண்டியதற்காவது கொஞ்சம் பருத்தி பயிர்செய்து கொள்ளவேண்டும். பயிர் வேலை ஒன்றும் கஷ்டமில்லை. பீஹார் மாகாணத்தில் குடியானவர்கள் தங்கள் நிலத்தில் 7-ல் 1 பாகத்தில் அவுரி பயிர்செய்து தரவேண்டுமென்று சர்க்காரால் கட்டாயப்படுத்தப்பட்டார்

கள். எதற்காக? வெளி நாட்டிலிருந்து வந்த அவுரி வியாபாரியின் சௌகரியத்திற்காக. அப்படியிருக்க, நம்முடைய நாட்டின் க்ஷேமத்திற்காக நாமாக ஏன் கொஞ்சம் பருத்தி பயிர் செய்துகொள்ளக் கூடாது? தேவைக்கே உற்பத்தி என்ற கொள்கை கதர்த் தொழிலின் முதல் அம்சத்திலேயே அனுஷ்டானத்திற்கு வருகிறதென்பதை வாசகர்கள் கவனித்துக்கொள்ள வேண்டும். இன்று பருத்தியை வியாபாரத்திற்காகப் பயிர் செய்கிறார்கள். சில பிரதேசங்களில் மட்டும், ஏராளமாக உற்பத்தி செய்து, நம் நாட்டிலேயே உள்ள தூரப் பிரதேசங்களுக்கும், இங்கிலாந்துக்கும், ஜப்பானுக்கும் அனுப்புகிறார்கள். விற்பனைக்காகப் பயிர் செய்வதால், விவசாயி மார்க்கெட்டு நிலவரத்தில் ஏற்படும் லாப நஷ்டங்களுக்கெல்லாம் ஆளாகிறான். கதர் முறையில் விவசாயிக்கு இந்த விபத்தெல்லாம் கிடையாது. இம்முறையில், அவன் தேவைக்கு வேண்டிய அளவு பயிர் செய்கிறான். தனக்குத் தேவையுள்ளவரை பயிர் செய்வதுதான் தன்னுடைய முக்கியமான வேலை என்பதை அவன் உணரவேண்டும். இதை உணர்ந்தானானால், விலை இறக்கம், வியாபாரக் குறைவுபோன்ற பிணிகளினின்றும் தப்பித்துக்கொள்வான்.

பயிர் செய்துகொள்ள முடியாதவர்கள், தேவைக்கு வேண்டிய அளவு பருத்தியை வாங்கி அரைத்துக்கொள்ளலாம். அரைப்பதற்கு ரோலர் போட்ட கைமணை கூட வேண்டியதில்லை. தனக்கு வேண்டியதற்கு, ஒரு பலகையும் ஒரு இரும்பு ரோலரையுமே வைத்துக்கொண்டு அரைத்துவிடலாம். அரைத்துக்கொள்வதற்கும் சௌகரியமில்லையென்றால், அரைத்த பஞ்சை வாங்கி வெட்டிக்கொள்ள வேண்டும். சொந்தத் தேவைக்கு வெட்டிக்கொள்வதற்கு சிறு கை வில் போதும். சுலபமாக வெட்டலாம். தேவைக்கே உற்பத்தி என்ற கொள்கையை நாம் எவ்வளவு தூரம் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருகிறோமோ, அவ்வளவுக்கு நம் தளவாடங்களும் மலிவாகவும் கையாளுவதற்குச்

சுலபமாகவும் அமையும். அடித்த பஞ்சைப் பட்டைபோட்ட பின் நூற்றல். நூற்பதற்கு 'தனுஷ் தக்ளி'யையே நான் சிபார்சு செய்வேன். நானும் அதைத்தான் இப்போது அதிகமாக உபயோகப்படுத்தி வருகிறேன். சர்க்காவில் எவ்வளவு வேகமாக நூற்க வருகிறதோ, அவ்வளவு இதிலும் முடிகிறது. நூலோ, இன்னும் மெல்லியதாய் இருப்பதுடன், முறுக்கும் பலமும் அதிகமாக இருக்கிறது. நூலின் சுத்தமும் ஒரே மாதிரியாய் வருகிறது. இது என் அனுபவம். எல்லோருக்கும் இவ்விதமே இருக்கும் என்று சொல்லவில்லை. ஆனால் முக்கியமாக எதற்காக நான் 'தனுஷ் தக்ளி'யைப் பற்றி வற்புறுத்துகிறேன் என்றால், அதைச் சுலபமாகச் செய்யலாம், விலைக்கு வாங்குவதென்றாலும் மலிவு, அதற்கு ரிப்பேர்களும் அதிகம் ஏற்படாது. சர்க்காவில், இரண்டு மாலைக் கயிறுகளையும் அளவாகக் கட்டவேண்டும். அவைகள் கழன்றால் சரியாக மாட்டவேண்டும். சரியாகச் சுற்றவில்லை யென்றால் என்ன பிசகு என்று கவனித்து சரிப்படுத்தவேண்டும். இவ்வளவையும் அவ்வப்போது கவனிக்கத் தெரியாவிட்டால், நூற்பது அடிக்கடி நின்றுவிடும். மேலும், கோடிக்கணக்கானவர்கள் உடனே நூற்க ஆரம்பித்துவிட வேண்டும் என்பது நம் கோரிக்கை. கோரிக்கை ஒருபுறமிருக்க, யுத்தக் கோளாறினால் அப்படி எல்லோரும் நூற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும் ஏற்படும். 'தனுஷ் தக்ளி' செய்வதற்கும், உபயோகிப்பதற்கும் சுலபமாய் அமைந்திருப்பதனால், அதைத்தான் ஏராளமான ஜனங்களின் தேவைக்கு உடனே சப்ளை செய்ய முடியும்.

பருத்தி செய்வது முதல் நூற்றல் வரை, கதரின் பல வேறு அம்சங்களிலும், தேசத்தில் சகலரும் பங்கெடுத்துக் கொள்வதை மனத்தில் கற்பனை செய்து பாருங்கள். ஏழைக்கும் பணக்காரனுக்குமுள்ள வித்தியாசங்களெல்லாம் நடைமுறையில் எவ்வளவு தூரம் தாமாகவே மறைந்துவிடும்?

நூற்ற நூலை மூன்று விதத்தில் உபயோகிக்கலாம். ஏழைகளுக்கு இனமாகக் கொடுக்கச் சொல்லி சர்க்கா சங்கத்தாரிடம் ஒப்படைத்துவிடலாம். அல்லது, சொந்த உபயோகத்திற்காகத் துணியாக நெய்துகொள்ளலாம். அல்லது அதன் விலைக்கு கதர்த் துணி வாங்கிக்கொள்ளலாம். நூல் நயத்திலும் மென்மையிலும் உயர உயர, அதற்கு விலையும் உயர்வுதான். காங்கிரஸ்காரர்கள் இவ் வேலையில் இதய பூர்வமாக ஈடுபட்டால், தொழிலில் உபயோகிக்கப்படும் கருவிகளில் எவ்வளவோ அபிவிருத்தி செய்யலாம், புதியவைகளைக் கண்டுபிடிக்கலாம். இன்று நம் நாட்டில் அறிவும் உழைப்பும் வெவ்வேருகப் பிரிந்து கிடக்கின்றன. இதன் விளைவாக, சமூகமே அபிவிருத்தி என்னும் ஓட்டம் அற்று, குட்டையாய்த் தேங்கிக் கிடக்கிறது. அறிவும் உழைப்பும் இரண்டறக் கலந்தால், அதுவும் மேலே சொல்லியபடி கலந்தால், அதனல் ஏற்படும் பலனை அளவிட முடியாது.

தேசத்திலுள்ளவர்கள் அனைவரும் ஈடுபடுவதற்காக, மேலே விவரித்திருக்கும் திட்டப்படி, ஒவ்வொருவரும் தினமும் ஒரு மணி நேரம் நூற்ருல் போதும்.

5. இதர கைத்தொழில்கள்

இவற்றிற்கும் கதர்த் தொழிலுக்கும் வித்தியாசம் உண்டு. யாவரும் இவற்றில் தாமாக ஈடுபடுவதற்குச் சௌகரியமில்லை. இத்தொழில்கள் ஒவ்வொன்றிலும் ஒரு சிலர் தான் வேலை செய்ய முடியும். கதருக்குத் துணையாக இவை அமையும்; கதர் இல்லாமல் இவை வளமடைய முடியாது; இவை இல்லாமல் கதரும் பெருமை அடையாது. மாவரைத்தல், நெல் குத்துதல், சோப், காகிதம், தீக்குச்சி முதலியவை செய்தல், தோல் பதனிடுதல், எண்ணெய் ஆட்டுதல் முதலிய கைத்தொழில்களின்றி நாம் லட்சியமாகக் கொண்டுள்ள கிராம சமுதாயம் நிறைவு பெருது. காங்கிரஸ்காரர்கள்

இவற்றில் கவனம் செலுத்தவேண்டும். காங்கிரஸ்காரர்களில், கிராமவாசிகளாயுள்ளவர்களும் கிராமத்தில் வாசம் செய்யக்கூடியவர்களும், இத்தொழில்களுக்குப் புத்துயிரும் புதிய உருவமும் அளிக்கலாம். கிடைத்த மட்டில் எல்லோரும் கைத்தொழில் சாமான்களையே வாங்கவேண்டும். கிராக்கி ஏற்பட்டால், தேவையான வரையில் இவைகளை உற்பத்தி செய்யக்கூடும் என்பதில் சந்தேகமில்லை. மேலே குறிப்பிட்ட கிராம வாழ்வில் நமக்குப் பற்றுதல் ஏற்பட ஏற்பட, மேல் நாட்டு முறைகளிலும், மெஷினுல் செய்த சாமான்களிலும் நமக்குள்ள விருப்பம் நீங்கி, உண்மையான தேசியப் பண்புடன் நாம் வாழ்க்கை நடத்துவோம். வறுமையும் பட்டினியும் சோம்பலும் ஒழிந்த உலகத்தில் வாழப் பக்குவமும் அடைவோம்.

6. கிராம சுகாதாரம்

அறிவும் உழைப்பும் பிரிந்து கிடப்பதனுல் ஏற்பட்ட மற்ெருரு பலன், நாம் நம்முடைய கிராமங்களின் நிலைமையைப்பற்றி சற்றும் சிந்தியாமல் அலட்சியம் செய்வது. அதனுல் அழகிய சிறு கிராமங்களாகக் காட்சி அளிப்பதற்குப் பதிலாக, அவை வெறும் குப்பை மேடுகளாகவே இருக்கின்றன. எத்தனையோ கிராமங்களில் உள்ளே நுழையும் போதே தலைவலி எடுத்துவிடுகிறது. சுற்றியுள்ள அசுத்தத்தைப் பார்க்க வேண்டாமென்று கண்ணை மூடிக்கொள்ளவும், துர்க்கந்தத்திலிருந்து தப்பிக்கவேண்டி நாசித் துவாரங்களை அடைத்துக்கொள்ளவும் தோன்றுகிறது. காங்கிரஸ்காரரில் பெரும்பாலோர், கிராமத்தில் பிறந்தவர்கள் தான். அப்படி யிருந்தும், அவர்கள் தங்கள் கிராமங்களை ஒழுங்குபடுத்தி, அழகுக்கும் சுத்தத்திற்கும் லட்சியமாக அவைகளை ஏன் வைத்துக்கொள்ளவில்லை? ஏனெனில், கிராமவாசிகளின் தினசரி வாழ்க்கையில் தங்கள் வாழ்க்கையையும் கலக்கவேண்டும் என்றும், அது தங்கள் கடமை என்

றும் அவர்கள் எண்ணியதில்லை. நாடே சுத்தமா யிருக்க வேண்டும்; சொந்த வாழ்வில் மட்டுமல்லாமல் சமூக வாழ் விலும் சுகாதாரம் ஓங்கவேண்டும் என்று நாம் எண்ணுவ தில்லை. ஸ்நானம் செய்வோம். ஆனால் நாம் ஸ்நானத்திற்கு உபயோகிக்கும் கிணற்றையும், குளத்தையும், ஆற்றையும் அசுத்த மாக்குவோம். இது ஒரு துர்க்குணம். நம் கிரா மங்கள் சீர்கேடடைந்திருப்பதும், நம்முடைய புராதன மான ஆறுகள் கரையெல்லாம் அசுத்தமயமா யிருப்பதும், சுகாதாரம் இன்மையினால் வரும் வியாதிகளும் மேலே சொன்ன துர்க்குணத்தின் விளைவுதான்.

7. புது முறை அல்லது அடிப்படைக் கல்வி

இது ஒரு புதிய விஷயம். இருந்தும், காங்கிரஸ் காரியக் கமிட்டியார் இதன் அவசியத்தை உணர்ந்து, இதை வளர்த்துப் பரப்புவதற்கு வேண்டிய அதிகாரத்தை ஹிந்து ஸ்தானி தாலீமீ சங்கத்தாருக்குக் கொடுத்திருக்கிறார்கள். இச்சங்கம் ஹரிபுரா காங்கிரஸிலிருந்தே வேலை செய்து வருகிறது. காங்கிரஸ்காரர்கள் பலரும் இதில் ஈடுபட லாம். அவ்வளவுக்கு வேலை இருக்கிறது. கிராமத்திலுள்ள குழந்தைகளுக்கு, சிறந்த கிராம வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய பயிற்சி அளிப்பதுதான் இப்புதிய கல்வி முறை யின் நோக்கம். அவர்களுக்கென்றே இது அமைக்கப்பட் டிருக்கிறது.கிராம வாழ்வில் உள்ள அபிமானத்தினால்தான் இவ் வேலையில் எங்களுக்கு ஊக்கம் பிறந்தது. உண்மை யான சுயாட்சி வேண்டும், அது என்றும் நிலவி யிருக்க வேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் விரும்பினால், அவர் கள் குழந்தைகளை அலட்சியம் செய்யலாகாது. அன்னிய ஆட்சியை ஸ்தாபிப்பதற்கு அன்னியர்கள், தெரிந்தோ தெரியாமலோ, கல்வியில்தான் முதலில் கைவைத்தார்கள். இப்போது அமுலில் இருந்துவரும் ஆரம்பக் கல்வி ஒரு கேலிக்கூத்தென்று சொன்னால் குற்றமில்லை. கிராமவாசி

களின் வாழ்க்கை முறைக்கும் அவர்கள் தேவைகளுக்கும், இக்கல்விக்கும் சம்பந்தமே யில்லை. நகரவாசிகளுக்கும் பய னளித்துவிட்டது என்றும் சொல்ல முடியாது. நாம் பரப்ப விரும்பும் புதிய முறையின் மூலம், நாட்டிலுள்ள குழந்தை கள் (அவர்கள் கிராமத்திலிருந்தாலும் சரி, நகரத்திலிருந் தாலும் சரி) நம்முடைய புராதன நாகரிகத்திற்கும் கலைக் கும் வாரிசாக ஆகிருர்கள். இம்முறை அறிவையும் உடலை யும் ஒருங்கே வளர்க்கிறது. இம்முறை, குழந்தைக்குத் தான் பிறந்த கிராமத்திலேயே ஒரு ஆர்வத்தை உண்டாக்குவ துடன், எதிர்கால வாழ்வின் அமைப்பில் தனக்கும் ஒரு பங்கு உண்டென்பதை உணரச்செய்து, அதற்கு வேண்டிய பயிற் சியையும் கொடுக்கிறது. இவ்வுணர்வும் பயிற்சியும் படிப் பின் ஆரம்பத்திலிருந்தே வளர்ந்து வருகிறது. காங்கிரஸ் காரர்கள் இதில் ஈடுபட்டால், குழந்தைகளுடன் தாங்களும் அரிய பயனடைவார்கள். இம்முறையைப் பற்றி மேலும் அறிய விரும்புவோர் சேவா கிராமத்திலிருக்கும் ஹிந்துஸ் தானி தாலீமி சங்கத்தின் காரியதரிசிக்கு எழுதித் தெரிந்து கொள்ளவேண்டியது.

8. வயது வந்தவர் கல்வி

இவ் விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் கவனம் செலுத்தவே யில்லை. இதில் சிரத்தை எடுத்துக்கொண்ட சிலரும், பாமரர்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்தால் போதும் என்றெண்ணி, அதைத்தான் செய்து வந்திருக்கிருர்கள். படிக்காமல் பிராயம் அடைந்த வருக்குக் கல்வி புகட்டுவதென்ருல், நான் முதலில் அவர்களுடன் பேசி, நம் நாட்டின் மகத்துவத்தையும் பெரிய அளவையும் அவர்கள் உணரச் செய்வேன். இன்றைய கிராமவாசி கிணற்றுத் தவளை. அவன் கிராமம்தான் அவன் தேசம். அடுத்த கிராமத்திற்குச் சென்ருல் தன் கிராமம்தான் தன் தேசம் என்ற மனப்பாங்கிலேயே

அவன் பேசுகிறான். இந்தியா என்பது அவனுக்கு வெறும் வார்த்தையே ஒழிய, எந்தவிதமான உணர்ச்சியையும் அது அவன் மனத்தில் எழுப்புவதில்லை. கிராமவாசியின் அறியாமை முழுவதையும் நாம் இன்னும் அறிந்தபாடில்லை. அன்னிய ஆட்சியைப் பற்றியும் அதன் கொடுமைகளைப் பற்றியும் அவனுக்கு ஒன்றும் தெரியாது. ஏதேனும் கொஞ்சம் அரைகுறையாகத் தெரிந்துகொண்டிருந்தால், அதிலிருந்து அவனுக்கு, அன்னியரிடம் ஒரு பயமும், நாம் அனாதை என்ற சோர்வும்தான் உண்டாகிறது. அன்னியரிடம் நடுக்கமும் ஆத்திரமும்தான் அவன் கொண்டிருக்கிறான். இந்த அன்னிய ஆட்சியை எப்படி ஒழிப்பது என்று அவனுக்குத் தெரியாது. நம்முடைய பலஹீனத்தினாலும் அறியாமையினாலுமே அன்னியர்கள் நம் மேல் ஆட்சி செலுத்துகிறார்கள்; இவ்வாட்சியை ஒழிப்பதற்கு வேண்டிய சக்தி நம்மிடமே இருக்கிறது என்பதெல்லாம் அவனுக்குத் தெரியாது. வயது வந்தவர்களின் அறிவை வளர்ப்பது என்றால், அவர்களுக்கு அரசியல்விஷயங்களைப்பற்றிச் சொல்லுவதுதான் முக்கியமான வேலையாக எனக்குத் தோன்றுகிறது. இவ்வேலையில் பயமின்றியும் பகிரங்கமாகவும் ஈடுபடலாம். இவ்வளவு நாளைக்குப் பிறகும், தற்காலத்தில் சர்க்கார் இவ்வித வேலையில் குறுக்கிட்டுத் தடை செய்வார்களென்று நான் எண்ணவில்லை. அப்படிச் செய்தால், அத்தடையை நீக்க நாம் போராடி ஆகவேண்டும். இவ்வுரிமையை அடையாமல் நாம் சுயாட்சியை ஒரு நாளும் அடைய முடியாது. இதுவரையில் நான் சொன்ன விஷயங்களில் எல்லாம் வெளிப்படையாகத்தான் ஈடுபடவேண்டும். அஹிம்சை முறையில் பயத்திற்கும் ரகசியத்திற்கும் இடமே கிடையாது. அரசியல் அறிவு விருத்தியுடன் எழுதப் படிக்கவும் கற்றுக்கொடுக்க வேண்டியதுதான். இவ்வேலைக்கும் தனிப் பயிற்சி வேண்டும். குறைந்த காலத்தில் எழுத்தறிவு புகட்டுவதற்காக இப்போது பல முறைகளைக் கை

யாளுகிருர்கள். இது விஷயத்தில் காங்கிரஸில் நிபுணர் களைக் கொண்ட ஒரு கமிட்டி ஏற்படுத்தி, அவர்களுக்கு இக்கல்வி முறைகளை ஒழுங்குபடுத்தவும், இவ்வேலையில் ஈடுபட விரும்புபவர்களுக்கு வழிகாட்டவும், அதிகாரம் அளிக்கவேண்டும். வயது வந்தவர் கல்வியைப்பற்றி நான் மேலே சொன்னதெல்லாம் குறிப்பாக இருக்கிறதே ஒழிய, ஒவ்வொரு காங்கிரஸ்காரனும் என்னென்ன செய்யவேண்டு மென்பதை நான் விவரிக்கவில்லை. ஒவ்வொரு காங்கிரஸ் காரனும் ஈடுபட்டு வேலை செய்யக்கூடிய காரியமும் அல்ல இது. உபாத்தியாயர்களாயுள்ள காங்கிரஸ்காரர்கள், மேலே சொன்ன கருத்துக்களை ஒட்டி, இக்கல்விக்கு முறை வகுத்து உதவலாம்.

9. மாதர் முன்னேற்றம்

சத்தியாக்கிரக இயக்கத்தின் மூலம், அடைந்து கிடந்த இந்திய மாதர்கள் ஓரளவு சுதந்திரம் பெற்றிருக்கிருர்கள். இதுவும் எவ்வளவு சீக்கிரத்தில்! இருந்தாலும், சுதந்திரப் போராட்டத்தில் பெண்களும் ஆண்களுடன் சமமாகப் பங் கெடுத்துக் கொள்ளவேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் உணரவில்லை. ஆகவே மாதர் முன்னேற்றத்தையும் நான் நிர்மாணத் திட்டத்தில் ஒருஅம்சமாகச் சேர்த்திருக்கிறேன். சேவை புரிவதில் ஆணுக்குப் பெண் கூட்டாளி என்பதைக் காங்கிரஸ்காரர்கள் இன்னும் உணரவில்லை. சட்டபூர்வ மாகவும் பழக்க வழக்கங்களினுலும் பெண்கள் அடக்கி வைக்கப்பட்டிருந்தார்கள். இச்சட்டத்தையும் இப்பழக்க வழக்கங்களையும் புருஷர்களே ஏற்படுத்தியபடியால், அவர் கள்தான் இச் சீர்கேட்டிற்குப் பொறுப்பாவார்கள். அஹிம் சையை அடிப்படையாகக் கொண்ட உலகில், வாழ்க்கை யைத் தன் இஷ்டப்படி அமைத்துக்கொள்வதற்கு, ஆணைப் போல் பெண்ணுக்கும் உரிமை உண்டு. ஆனுல் அஹிம்சை உலகில் கடமையைச் சரிவரச் செய்வதன் பயனுகத்தான்

உரிமைகள் கிடைக்கும். ஆகவே, சமூகத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தங்கள், அவர்கள் பரஸ்பர ஒத்துழைப்பினுலும், கலந்து செய்யும் ஆலோசனை யினுலுமே அமையவேண்டும். அப்படியின்றி ஏற்படும் விதிகள் அடக்குமுறையாகத்தான் முடியும். அஹிம்சா உலகில் அடக்குமுறைக்கு இடமே கிடையாது. தற்சமயம் புருஷர்கள் மாதர்களிடம் நடந்துகொள்ளும் முறையைப் பார்த்தால், இந்தத் தத்துவத்தை அவர்கள் உணரவில்லை என்பது தெரியும். மாதர்களுக்குத் தாங்கள் நாயகர்க ளாகவும் யஜமானர்களாகவுமே எண்ணுகிருர்கள். தங் கள் உடனுழைத்த நண்பர்களாகவும், ஒரே சேவையில் ஈடு பட்ட தோழர்களாகவும் எண்ணவில்லை. மாதர்களுக்கு சம உரிமை அளிக்கும் வேலை காங்கிரஸ்காரர்களுடையது. இவ்வேலை அவர்களுடைய பாக்கியம். முன் காலத்திலிருந்த அடிமைகளைப் போலத்தான் இன்று மாதர்கள் வாழ்கிருர் கள். அடிமைக்குத் தான் சுதந்திரம் அடையக் கூடும் என்ருே, அடைய வேண்டும் என்ருே தோன்றியதில்லை. சுதந்திரம் கிடைத்தபோது, என்ன செய்வதென்று தோன் ருமல் அவன் திகைத்தான். மாதர்களும் புருஷர்களின் அடிமைகள் என்ற எண்ணத்திலேயே வளர்க்கப்பட்டிருக் கிருர்கள். அவர்கள் பூரண உரிமைகளையும் அடைந்து, புருஷர்களுடன் சமமாக சேவை செய்யும்படி உதவவேண்டி யது காங்கிரஸ்காரரின் கடமை.

இம்மாறுதல் புரட்சிகரமானதா யிருந்தாலும், மனது வைத்தால் சுலபமாகச் செய்துவிடலாம். இதைக் காங்கிரஸ் காரர்கள் முதலில் தங்கள் குடும்பத்திலேயே ஆரம்பிக்க வேண்டும். மனைவி என்பது அலங்காரத்திற்காக ஏற் பட்ட பொம்மை, போகத்திற்காகக் கிடைத்த கருவி என்ற எண்ணம் மாறி, அவள், வாழ்க்கை என்னும் சேவையில் உடனுழைத்த கூட்டாளி, அவளைக் கௌரவமாக நடத்தவேண்டும் என்ற எண்ணம் வரவேண்டும். இதற்கு

ஏற்றபடி, படிக்காத பெண்களும் முக்கியமான விஷயங்களைத் தங்கள் புருஷர்களிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டும். இவ்விதமே, தாய்மாரும் புத்திரிகளும் தங்கள் தங்கள் பிள்ளைகளிடத்திலும் தகப்பனுர்களிடத்திலும் படித்துக்கொள்ள வேண்டும்.

இதுவரை நான் மாதரைப்பற்றிச் சொன்னதன் மூலம், ஒரு கட்சியையே எடுத்துக் காட்டியிருக்கிறேன். சாதாரணமாக கிராமங்களில் மாதர்கள் புருஷர்களுடன் சமமாக வாழ்கிருர்கள் என்பதையும், சில விஷயங்களில் புருஷர்களின் பேரில் ஆட்சி செலுத்துகிருர்கள் என்பதையும், அறிவேன். ஆனல் பட்சபாதமில்லாமல் இவ்விஷயத்தைக் கவனிப்பவனுக்கு, சட்ட பூர்வமாகவும் நெடு நாள் பழக்கத்திலும் மாதருக்குத் தற்சமயம் ஏற்பட்டிருக்கும் அந்தஸ்து கேடு வாய்ந்தது என்பதும், அதை அடியோடு மாற்றவேண்டும் என்பதும் விளங்கும்.

10. ஆரோக்கியமும் அதைப் பற்றிய அறிவும்

நிர்மாணத் திட்டத்தில் கிராம சுகாதாரத்திற்குத் தனி ஸ்தானம் கொடுத்த பிறகு, ஆரோக்கிய அறிவிற்கு வேறு ஸ்தானம் ஏன் என்ற கேள்வி எழலாம். இரண்டையும் சேர்த்திருக்கலாம். ஆனல், நான் அப்படிச் செய்ய விரும்பவில்லை. சுகாதாரத்திலேயே ஆரோக்கிய அறிவும் பூரணமாக அடங்கிவிடவில்லை. மனிதன் தன்னை ஆரோக்கியமாக வைத்துக்கொள்வதற்கு அதற்கு வேண்டிய விதிகளைப் படித்து அறிந்து அறிந்தவற்றை அனுஷ்டானத்திற்கும் கொண்டுவர வேண்டும். செம்மையாய் அமைந்த சமூகத்தில் ஒவ்வொருவரும் ஆரோக்கிய விதிகளை அறிந்து, அனுஷ்டானத்திலும் கடைப்பிடிப்பார்கள். மனித வர்க்கத்தில் குடிகொண்டிருக்கும் வியாதிகள் பலவற்றிற்குக் காரணம் ஆரோக்கிய விதிகளை நாம் அறியாததும், அறிந்தவர்கள் அனுஷ்டிக்காததும்தான். நம்மிடையே வருஷந்

தோறும் இவ்வளவு பேர் மரணமடைவதற்கு முக்கிய காரணம் நம்முடைய வறுமையே. இருந்தாலும் நம் மக்கள் ஆரோக்கிய விதிகளை நன்கு அறிந்துகொண்டால், நம் மரண எண்ணிக்கையை வெகுவாகக் குறைத்துவிடலாம்.

உடல் ஆரோக்கியமாக இருந்தால் உள்ளமும் ஆரோக்கியமாக இருக்குமென்பது மனித வர்க்கத்தின் முதல் நியதி. இதை ஒவ்வொருவரும் அனுபவ பூர்வமாக அறிந்துகொள்ளலாம். உடலுக்கும் உள்ளத்திற்கும் பிரிக்க முடியாத சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. உள்ளம் செம்மையாயிருந்தால், நாம் பலாத்காரத்தை அறவே நீக்கிவிடுவோம். ஆரோக்கிய விதிகளை அனுசரித்து, சிரமமின்றி உடலையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்வோம். காங்கிரஸ்காரர்கள் இவ்வேலையில் அலட்சியம் காட்டக் கூடாது. ஆரோக்கியத்திற்கு முக்கியமான விதிகள் வெகு சிலதான், சுலபமாகவும் அறிந்துகொள்ளலாம். அனுஷ்டிப்பதுதான் கஷ்டம். அவைகளைக் கீழே தந்திருக்கிறேன் :

1. உள்ளத்தில் தூய்மையான எண்ணங்களையே வளர்க்கவேண்டும். கெட்ட எண்ணங்களுக்கும் அனாவசியமான யோசனைகளுக்கும் இடம் கொடுக்கக் கூடாது.

2. இரவும் பகலும் சுத்தமான ஆகாயத்தையே சுவாசிக்க வேண்டும்.

3. உடல் உழைப்பும் அறிவைச் செலுத்தும் வேலையும் சரியான தராதரத்துடன் இடம் பெறும் விதம் தினசரி வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.

4. நிற்கும் போதும், உட்காரும் போதும் நிமிர்ந்திருக்கவேண்டும். செய்கை ஒவ்வொன்றும் பரிசுத்தமாகவும் அழகாகவும் இருக்கவேண்டும் என்பதுடன், அது உள்ளத்தின் தூய்மையை விளக்குவதாயும் இருக்கவேண்டும்.

5. உடன் பிறந்த மானிடரின் சேவைக்கே வாழ்கிறோம் என்று எண்ணி, அந்த எண்ணத்திற்குத் தக்கபடி உணவு கொள்ளவேண்டும். போகத்திற்கே வாழ்வென்பது

கூடாது. ஆகவே, உடலையும் உள்ளத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்வதற்கு வேண்டிய அளவே சாப்பிட வேண்டும். அதற்கு மேல் கூடாது. மனிதன் உணவிலிருந்தே அவன் தன்மையும் வளர்கிறது.

6. உட்கொள்ளும் ஆகாரமும் நீரும், காற்றும் மூன்றும் சுத்தமாயிருந்தால் மட்டும் போதாது. சுற்றியுள்ளோருக்கும் சுத்த வாழ்வில் பற்று உண்டாக்கி அவர்களையும் சுத்தமாயிருக்கச் செய்யவேண்டும்.

11. தேசிய பாஷைப் பிரசாரம்

தாய்மொழிக்கு மேலாக ஆங்கிலத்தை நாம் பாராட்டி அதையே உபயோகத்திலும் வைத்துக் கொண்டதால், படித்தவர்களும் அரசியல் அறிவு படைத்தவர்களுமாக ஒருபுறமும், மற்றவர்கள் கோடிக் கணக்கில் இன்னொரு புறமுமாக, இந்திய சமூகமே இருதரப்பாகப் பிரிந்து நிற்கிறது. இவர்களிடையே ஒருவித உறவாடலும் இல்லாதபடி ஒரு பெரும் தடை ஏற்பட்டுவிட்டது. நாட்டு மொழிகள் அறிவாளிகளின் உபயோகத்தில் இல்லாமல், வறுமையுற்று மெலிந்துவிட்டன. படித்தவர்களாகிய நாம், நயமும் சிறப்பும் வாய்ந்த புதிய கருத்துக்களைத் தாய்மொழிகளில் வெளியிட முயற்சிக்கும் போதெல்லாம், வார்த்தைகள் கிடைக்காமல் தடுமாறுவதுதான் மிச்சம். விஞ்ஞானக் கருத்துக்களுக்குச் சரியான பதங்கள் இவைகளில் கிடையாது. இதன் விளைவு விபரீதம். ஜனசமூகம் நவீன-அறிவின் எல்லையைக்கூட அணுகவில்லை. இக்கோட்டின் அளவை மதிப்பிட இன்று வாழும் நம்மால் முடியாது. உணர்வதற்கு இன்னும் பல ஆண்டுகள் சென்ற பிறகுதான் முடியும். ஒரு விஷயம் மட்டும் தெளிவாக யாருக்கும் தெரியும். அதாவது, படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கும் இடையேயுள்ள இந்த வேற்றுமை, இந்த விபரீதம் நீங்கும் வரை, பாமரர்கள் அறிவற்ற விலங்குகளாகத்தான்

வாழவேண்டும். சுயாட்சி நிர்மாணம் செய்வதில் அவர்களால் ஒரு பங்கும் எடுத்துக்கொள்ள முடியாது. சுதந்திரப் போராட்டத்தில், தேசத்திலுள்ளவர் அனைவரும் பங்கெடுத்துக்கொண்டால்தான், அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட சுயாட்சி ஏற்படும். சுதந்திரப் போராட்டத்தின் தத்துவார்த்தங்கள் எல்லாவற்றையும் உணர்ந்தால்தான், மக்கள் இப்போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்வார்கள். தாய்மொழியில் இவற்றை விளக்கிக் காட்டினால்தான் அவர்கள் தெரிந்துகொள்வார்கள்.

நாட்டின் பல பிரதேசங்களில் உள்ளவர்களும் கலந்து உறவாடுவதற்குச் சௌகரியமாக ஒரு பொதுப் பாஷையும் நமக்கு வேண்டியிருக்கிறது. இதற்கு நாட்டு மொழிகளிலேயே ஒன்றைப் பொறுக்கிக்கொள்ள வேண்டும். எந்த மொழியை இந்தியாவில் அதிகமானவர்கள் பேசி வருகிறார்களோ அதைத்தான் நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஹிந்திதான் நாம் மேலே சொன்ன நிபந்தனைகளுக்கு ஒத்து வருகிறதென்பதை எவரும் மறுக்க முடியாது. வட இந்தியாவில் இந்துக்களும் முஸ்லிம்களும் இம்மொழியிலேயே பேசுகிறார்கள். பாரசீக லிபியில் எழுதினால் இதற்கு உருது என்று பெயர். வட இந்தியாவில் வழங்கும் இம்மொழிக்கு 1925-ம் வருஷத்தில் கான்பூர் காங்கிரஸில் ஹிந்துஸ்தானி என்று பெயரிட்டார்கள்.

மேலே மக்களின் நிலைமையைப்பற்றி நான் சொன்னது 1920-ம் வருஷவரை அவர்கள் இருந்துவந்த விதம். அதற்குப் பிறகு தாய்மொழிகளில் அரசியல் பிரசாரம் செய்ய முயன்றிருக்கிறோம். அவ்விதமே, இந்தியாவில் அரசியல் சம்பந்தமுள்ளவர்கள் எல்லோரும் பேசுவதற்கும், வெவ்வேறு மாகாணங்களிலிருந்து காங்கிரஸ் மகா சபைக்கும் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கும் விஜயம் செய்யும் காங்கிரஸ்காரர்கள் கலந்து பேசுவதற்குச் சௌகரியமாகவும், ஒரு பொது மொழி வேண்டிய அவசியத்தையும் உணர்ந்

திருக்கிறோம். ஆனால் இது சம்பந்தமாக, காங்கிரஸின் தீர்மானத்தை காங்கிரஸ்காரர்களே அனுஷ்டிக்கவில்லை என்பதுதான் வருந்தத்தக்க விஷயம். காங்கிரஸ்காரர்கள் பலர் தாங்களே ஆங்கிலத்தில் பேசுவதுடன் மற்றவர்களை யும் ஆங்கிலத்தில் பேசக் கட்டாயப்படுத்துவது வெட்கக் கேடான விஷயம். ஆங்கிலத்தில் நாம் கொண்ட மோகத்தை இன்னும் விட்டபாடில்லை. அந்த மோகத்தில் பிடிபட்ட நாம், நாடு சுதந்திரம் அடைவதையும் தடை செய்கிறோம். ஆங்கிலம் கற்க எத்தனை வருஷங்கள் செல வழித்தோமோ, அத்தனை மாதங்கள்கூட ஹிந்துஸ்தானி கற்க நம்மால் செலவழிக்க முடியாதென்றால், இந்திய மக்க ளிடம் நமக்குள்ள அன்பெல்லாம் வெறும் பேச்சளவுதான்.

12. தாய்மொழிப் பற்று

இதைப் பற்றிச் சொல்லவேண்டியதெல்லாம் மேலே சொல்லியாகிவிட்டது. இந்தியா என்பது ஒரே சமுதாயம் என்ற கருத்தைக் கொண்டவர்களுக்கு, ராஷ்டிர பாஷைப் பிரசாரம், தாய்மொழிப் பற்று இவை இரண்டும் ஒன்றை யொன்று சார்ந்தே நிற்கும்.

13. பொருளாதார சமத்துவம்

பொருளாதார வாழ்வில் சமத்துவம் ஏற்படச் செய் வதுதான் அஹிம்சா பூர்வமான சுயாட்சிக்குத் திறவுகோல் போலாகும். பொருளாதார சமத்துவம் என்பது தொழி லாளிக்கும் முதலாளிக்கும் இதுவரை இருந்துவரும் விரோ தத்தை அகற்றல். ஒரு பக்கம், சிலரிடம் குவிந்து கிடக் கும் செல்வத்தைக் கரைக்கவேண்டும். மற்றொரு புறம் உண வும் உடையுமில்லாமல் தவிக்கும் லட்சக்கணக்கான மக்க ளின் நிலைமையைச் சீர்திருத்தவேண்டும். இவ்விதம் செல்வ மும் வறுமையும் தனித் தனியாக ஓங்கி வளர்ந்திருக்கும் வரை அஹிம்சை முறையில் அரசியல் நடத்த இயலாது.

இன்று டில்லி நகரம் மாட மாளிகைகளாகக் காட்சியளிக்கிறது ; அடுத்தாற் போல் உள்ள ஏழைகளின் குடிசைகள் வெயிலேயும் மழையையும் ஏற்று நிற்கின்றன. செல்வமும் செல்வத்தினுல் உண்டாகும் செல்வாக்கையும் உடையவர்கள், அவற்றைப் பொது சேவைகளுக்குப் பகிர்ந்து கொடுத்தாலொழிய, ரத்தப் பெருக்கெடுத்தோடும் புரட்சியையும் யுத்தத்தையும் தவிர்க்க முடியாது. சொத்துள்ளவர்கள், தங்கள் சொத்தை, ஏழைகளின் க்ஷேமத்திற்காகப் பரிபாலிக்க வேண்டுமென்ற தத்துவத்தைப் பலர் ஏளனம் செய்தபோதிலும், அதை நான் இன்னும் போற்றி வருகிறேன். இம் மனப்பான்மை பரவுவது கஷ்டமென்பது வாஸ்தவம். ஆனுல் அஹிம்சை முறையை அனுஷ்டிப்பதும் கஷ்டம்தான். 1920-ம் வருஷத்திலேயே நாம் அஹிம்சையைக் கடைப்பிடிப்பதென்று முடிவுகட்டியிருக்கிறோம். அதையொட்டி நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் பலனளிக்காமல் போகவில்லே.

பொருளாதார சமத்துவத்தை அடைவதற்கு, நாம் அஹிம்சை முறையின் போக்கை நாள்தோறும் கவனித்துப் போற்றி வளர்க்கவேண்டும். காங்கிரஸ்காரர்கள் தங்களுக்கு இடப்பட்ட கட்டளேகள் ஒவ்வொன்றின் காரண காரியங்களேயும் ஆராய்ந்து அறிந்து செய்வார்களானுல், அஹிம்சை முறையின் மேன்மையை உணர்வார்கள். நல்லெண்ணம் இருந்தால் மட்டும்போதாது. அரைமனதுடனே, அல்லது ஒப்பனேக்காகவோ, அவர்கள் எந்தக் காரியத்தையும் செய்வதில் பிரயோசனமில்லே. இப்போதுள்ள உயர்வு தாழ்வுகளேயும் வேறுபாடுகளேயும் பலாத்காரத்தினுல் நீக்க முடியுமா, அஹிம்சை முறையினுல் நீக்க முடியுமா, என்பதை அவர்கள் ஆழ்ந்து யோசித்துப் பார்க்கவேண்டும். பலாத்கார முறை நமக்குத் தெரியும். அதன் மூலம் இதுவரை எங்கும் வெற்றி கிடைக்கவில்லே. ரஷ்யாவில் வெற்றியடைந்துவிட்டதாகச் சொல்லுகிருர்கள். நான் நம்பவில்லே.

ரஷ்யாவில் பொதுவுடைமை ஸ்தாபிக்கப்பட்டுச் சிலவருஷங்கள்தான் ஆகின்றன. இதற்குள் வெற்றியென்றோ தோல்வியென்றோ முடிவு கட்டலாகாது. மேலும், இப்போது ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் மூண்டிருக்கும் போருக்குப் பின் என்ன ஆகும் என்பது எவருக்கும் தெரியாது.

நாம் மேற்கொண்ட அஹிம்சை முறை இன்னும் பரீட்சை அளவில்தான் இருக்கிறது. இம்முறையின் சிறப்புக்கு அடையாளமாக நாம் பல வெற்றிகளை எடுத்துக்காட்ட முடியாது. ஆனால், சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு இம்முறை வேலை செய்ய ஆரம்பித்துவிட்டது என்பது என் அனுபவம். அஹிம்சை முறை என்பது மக்களின் மனத்தை மாற்ற முயற்சிப்பதுதான். மன மாற்றம் ஏற்பட்டுவிட்டால், அது நிரந்தரமாக இருக்கும். அஹிம்சைமுறையினால் அமைந்த சமூகத்திற்கு, உள்நாட்டுக் கலகமாகவோ அல்லது வெளி நாட்டிலிருந்து படையெடுப்பாகவோ, எந்த விதத்தில் இடையூறு வந்தாலும், சமாளித்துக் கொள்ளக் கூடிய சக்தி உண்டு. காங்கிரஸில் பணக்காரர்கள் இருக்கிறார்கள். சமத்துவம் ஏற்படுத்துவதற்கு அவர்கள்தான் வழி காட்டவேண்டும். இன்று நடக்கும் போராட்டம் தான் சுதந்திரத்திற்குக் கடைசிப் போராட்டம். காங்கிரஸ்காரர்களுக்கு இது சோதனைக் காலம். ஒவ்வொருவரும் உள்ளத்தை ஊடுருவிப் பார்த்துத் தெளிந்துகொள்ள வேண்டிய சந்தர்ப்பம். சமத்துவத்தை நாம் அடைய வேண்டுமானால் நாம் இப்போதே அதற்கு அஸ்திவாரம் போடவேண்டும். முக்கியமான சீர்திருத்தங்களையெல்லாம் சுதந்திரம் அடைந்த பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று எண்ணுபவர்கள் அஹிம்சை முறையின் தன்மையை அறியாதவர்கள்; அறிந்துகொண்டுவிட்டதாக மனப்பால் குடிப்பவர்கள். சுதந்திரம் என்பது மழையைப் போல் திடீரென்று வானத்திலிருந்து பெய்கிற பொருள் அல்ல. சமூகத்தின் சுய முயற்சியினால், அது சிறிது சிறிதாக நிறுவப்

படவேண்டும். இம்முயற்சியில் நாம் சிறிது தூரம் முன்னேறித்தான் இருக்கிறோம். ஆனால், நாம் கோரும் லட்சியத்தை அடையுமுன் இன்னும் வெகு தூரம் கடக்க வேண்டியிருக்கிறது. சமூகத்தில் சமத்துவம் நிலவுவதற்கு, என்ன சேவை செய்திருக்கிறோமென்று ஒவ்வொரு காங்கிரஸ்காரரும் ஆராய்ந்து தேர்ந்துகொள்ள வேண்டும்.

III

குடியானவர்கள், தொழிலாளிகள், மாணவர்கள்

நிர்மாணத் திட்டத்தில் அடங்கிய பதின்மூன்று அம்சங்களையும் பற்றிச் சொல்லி முடித்துவிட்டேன். ஒவ்வொரு முறையும் சுயாட்சி அமைப்பிற்கு எப்படி உதவுகிறது என்றும், ஒவ்வொன்றிலும் காங்கிரஸ்காரர்கள் எவ்விதம் வேலை செய்யலாமென்றும் ஒருவாறு விளக்கியிருக்கிறேன். நிர்மாணத் திட்டம் இந்தப் பதின்மூன்று அம்சங்களுடன் பூர்த்தியாகிவிடாது. சுயாட்சி என்பது மகத்தான அமைப்பு. நம் நாட்டின் ஜனத்தொகை நாற்பது கோடி. நம்முடைய சுயாட்சியின் நிர்மாணத்தில் எண்பது கோடி புஜங்களும் ஈடுபடவேண்டும். மேலே விவரித்த பதின்மூன்று அம்சங்களுடன் இன்னும் பல சேர்க்கலாம். ஆனால் எல்லாவற்றிலும் முக்கியமானது சர்க்கா. அதையொட்டித்தான் மற்றவை ஓங்கவேண்டும். இடையறாது நடக்கவேண்டிய நிர்மாண வேலைக்குச் சர்க்காதான் ஊக்கம் அளிக்கவேண்டும்.

இதுவரை குடியானவர்கள், தொழிலாளிகள், மாணவர்கள் முதலியவர்களைப் பற்றி நான் பிரஸ்தாபிக்காமலிருந்ததை வாசகர்கள் கவனித்திருப்பார்கள். மறதியினால் நான் அவர்களை விட்டுவிடவில்லை. மற்றவர்களைப் போல் அவர்களும் மேலே விவரித்திருக்கும் பதின்மூன்று அம்

சங்களிலும் ஈடுபடவேண்டியதுதான். சுயாட்சிப் போராட்டத்தில் அவர்களுக்குரிய பங்கை நான் அலட்சியம் செய்யவில்லை. விடுதலைக்கு அவர்கள் பெரும் உதவி செய்யக்கூடும் என்பதை நான் அறிவேன். ஆனால் யார் அவர்கள் சக்தியைத் திரட்டி ஒழுங்குபடுத்துவது? எவ்விதம் இவ்வேலையைச் செய்து முடிப்பது? ஆமதாபாத் தொழிலாளர், சங்கமாய்க் கூடி சௌகரியங்கள் பெற்றதற்கு நான்தான் காரணம். நம் நாட்டில் ஒவ்வொரு ஊரிலும் ஆமதாபாத் முறைகளைக் கையாண்டு பயனடைய வேண்டும் என்பது என் விருப்பம். அஹிம்சைதான் ஆமதாபாத் தொழிலாளர் சங்கத்தின் வேலைக்கு அடிப்படை. இதுவரையில் அச்சங்கம் தோல்வியடைந்ததே கிடையாது. ஆரம்பத்திலிருந்து, சிறிது சிறிதாக அதன் பலமும் உபயோகமும் வளர்ந்தே வந்திருக்கிறது. இப்பொழுது சங்கத்தின் கீழ் ஆஸ்பத்திரியும், சிறுவர்களுக்குப் பள்ளிக்கூடங்களும், வயது வந்தவர் கற்க வகுப்புக்களும், அச்சுக்கூடமும், கதர்க் கடையும் இருக்கின்றன. தொழிலாளிகள் வாசம் செய்ய வீடுகளும் கட்டப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்கள் எல்லோரும் வாக்காளர்கள் ஆனபடியால், அவர்கள் விரும்பும் அபேட்சகர்தான் எலெக்ஷனில் வெற்றி யடைவார். மாகாண காங்கிரஸ் கமிட்டியின் உதவியாலேயே அவர்கள் வாக்காளர்கள் ஆனார்கள். காங்கிரஸினுள்ளே ஏற்படும் கட்சிப் பிரதிகட்சிகளில் அவர்கள் கலந்துகொள்வதில்லை. ஆனால், அவர்கள் சங்கம் ஆமதாபாத் முனிசிபல் சபை ஆலோசனையிலும், கொள்கை நிர்ணயத்திலும் பங்கெடுத்துக்கொள்கிறது. பூரண அஹிம்சையுடன் பல வேலை நிறுத்தங்கள் செய்து, அது வெற்றி அடைந்திருக்கிறது. முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே ஏற்படும் வித்தியாசங்களை யெல்லாம் இருதரப்பாரும் ஒத்து ஏற்படுத்தும் பஞ்சாயத்து மூலம் தீர்த்துக்கொள்ளுகிறார்கள். எனக்கு அதிகாரமிருந்தால், நாட்டிலுள்ள

எல்லாச் சங்கங்களையும் ஆமதாபாத் சங்கத்தின் முறையிலேயே திருத்தி அமைப்பேன். இச்சங்கம், அகில இந்தியத் தொழிலாளர் சங்க மகா சபை (All India Trade Union Congress) யில் சேரவோ அல்லது அதைக் கைப்பற்றவோ முயற்சித்ததில்லை. நாளடைவில் அந்த மகாசபை இச்சங்கத்தின் கொள்கையையும் வேலை முறைகளையும் பின்பற்றும் என்பதும், அதன் பயனாக இதனையும் தன்னுடன் ஐக்கியப்படுத்திக்கொள்ளும் என்பதும் என் நம்பிக்கை. அதற்கு அவசரம் ஒன்றுமில்லை. காலக்கிரமத்தில் அது நிறைவேறும்.

குடியானவர்கள் சம்பந்தமாகவும் என்னுடைய கொள்கை தனி. தற்சமயம் மற்றவர்கள் அவர்களுடைய பெயரையும் பலத்தையும் உபயோகித்து, அதிகாரத்தைக் கைப்பற்றத்தான் போட்டி போடுகிறார்கள். இது தவறு. அஹிம்சை முறைக்கும் விரோதம். குடியானவர்களை ஒன்றுசேர்த்து அவர்கள் நலனைப் பாதுகாப்பதற்கு நான் கொண்டுள்ள முறையை அறிய விரும்புவோர் சம்பாரன் சத்தியாக்கிரக இயக்கத்தின் சரிதத்தைப் படித்துப் பயனடையலாம். சம்பாரன் பிரதேசத்தில்தான் இந்தியாவிலேயே முதல் முதலாக சத்தியாக்கிரக முறையைக் கையாண்டோம். அதன் பயனாகப் பூரண வெற்றி கிடைத்தது எல்லோருக்கும் தெரியும். அந்தப் பிரதேசத்திலுள்ள சகலரும் கலந்துகொள்ளும்படியான பொதுஜன இயக்கமாயிருந்தபோதிலும், ஆரம்பம் முதல் முடிவுவரை அஹிம்சையை விட்டுச் சற்றும் பிறழாமல் அந்த இயக்கம் நடந்தது. இருபது லட்சம் குடியானவர்கள் அதனால் பயனடைந்தார்கள். பல தலைமுறைகளாக ஆட்சி செலுத்திவந்த அநீதி ஒன்றை நீக்குவதற்காகவே அவ்வியக்கம் நடைபெற்றது. இயக்கத்திற்கு முன், அநீதியை நீக்குவதற்கு பலாத்காரப் புரட்சிகள் பல எழுந்தன. ஆனால் எல்லாம் அவ்வப்போது அடக்கப்பட்டுவிட்டன. அஹிம்சை முறையில் நடைபெற்ற இவ்வியக்கம் ஆறு மாதத்தில் உழவர்களுக்குப்

பலனளித்தது. இயக்கத்தில் ஈடுபட்டதில் உழவர்கள் அரசியல் உணர்வும் அடைந்தனர். அதைப்பற்றிப் பிரத்தியேகமாக அவர்களுக்குப் போதிக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இயக்கத்தின் வெற்றியினுல் பலனடைந்த உழவர்கள் தாமாகவே காங்கிரஸில் வந்து கலந்துகொண்டார்கள். பின்னர், பாபு விரஜகிஷோர் பிரசாத், பாபு ராஜேந்திர பிரசாத் முதலியோரின் தலைமையில் சட்டமறுப்பு இயக்கங்களில் சிறந்த முறையில் கலந்துகொண்டார்கள்.

கேடா, பார்டோலி, போர்சத் முதலிய இடங்களில் நடந்த இயக்கங்களையும் பற்றி வாசகர்கள் தெரிந்து கொண்டால் நலம். ஒரு விஷயம் ஞாபகத்திலிருந்தால் போதும். நாம் கோரும் அரசியல் நோக்கங்களை அடைவதற்காக, குடியானவர்களைத் திரட்டி உபயோகித்துக் கொள்வது என்னும் முறையில் வெற்றி கிடையாது. அவர்கள் கஷ்டங்களை, சில குறிப்பான குறைகளை, நீக்குவதற்குத்தான் அவர்களை ஒன்றுசேர்த்து வலிமையடையச் செய்ய வேண்டும். அவ்விதமான இயக்கங்கள் நடத்தினுல்தான், ஒரு குழப்பமும் இல்லாமல் உற்சாகத்துடன் பங்கெடுத்துக் கொள்வார்கள். அப்பொழுது அவர்களிடம் அஹிம்சையின் மேன்மையைப் பற்றிப் பிரசங்கம் செய்யவேண்டிய அவசியமும் இல்லை. நம்முடைய தலைமையில், தங்கள் இன்னல்களைப் போக்கிக் கொள்வதற்கு ஏற்ற முறையைத் தாங்கள் கையாளுவதை அவர்கள் உணர்கிருர்கள். அதன் மூலம் வெற்றி கிடைப்பதையும் காண்கிருர்கள். அதுதான் அஹிம்சை முறையென்று பின்னர் தெரிந்துகொள்ளும் போது, அதில் அவர்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் பிறக்கிறது.

மேலே கண்ட உதாரணங்களிலிருந்து, குடியானவர்கள் க்ஷேமத்திற்காக அவர்களிடையில் காங்கிரஸ்காரர்கள் எப்படி வேலை செய்வதென்பதை அறிந்துகொள்ளலாம். குடியானவர்களிடையே இப்போது சில காங்கிரஸ்காரர்கள்

கையாளும் முறையினுல், குடியானவர்களுக்கு நன்மை ஒன்றுமில்லை என்பதுடன், தீமையும் விளைகிறது என்பது என் துணிபு. பலன் ஒருபுறமிருக்க, அவர்கள் கையாளும் முறை அஹிம்சை அல்ல என்பது நன்ருய் விளங்குகிறது. தங்களுக்கு அஹிம்சையில் நம்பிக்கை யில்லை யென்றும் அவர்களில் சிலர் ஒப்புக்கொள்ளுகிருர்கள். அன்னுரின் நேர்மையை நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு என் யோசனை என்னவென்ருல், காங்கிரஸின் பெயரை உபயோகப்படுத்தியோ, காங்கிரஸ்காரர் என்ற ஹோதாவிலோ, அவர்கள் மேற்கண்ட வேலைகளில் ஈடுபடலாகாது.

அகில இந்தியாவிலும் உள்ள தொழிலாளர்களையோ, குடியானவர்களையோ, அனைவரையும் சேர்க்கும் முயற்சியில் நான் என் இறங்கவில்லை என்பது வாசகர்களுக்கு இப்போது விளங்கும். ஒருவரும் இக்காரியத்தில் இறங்காமல் இருந்திருந்தால் எவ்வளவோ நலமாயிருக்கும். ஆனல், நம் அகண்ட தேசத்தில் பலவித முறைகள் கையாளப்படுவது எதிர்பார்க்கக் கூடியதுதான். மேலும் அஹிம்சையில் எவ்விதப் பலவந்தமும் கிடையாது. நாம் மேற்கொள்ளும் காரியம் நியாயமா யிருப்பதுடன், நமக்கு வெற்றியும் கிடைத்தால், நாட்டிலுள்ளோர் அனைவரும் தாமாக வந்து நம் முறையை ஏற்றுக்கொள்வார்கள்.

கடைசியாக, மாணவர்களைப் பற்றி என்னுடைய கருத்து என்ன? மாணவர்களுடன் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவர்களை நான் அறிவேன், அவர்களும் என்னை அறிவார்கள். என்னுடன் இருந்து அவர்கள் சேவை புரிந்திருக்கிருர்கள். இன்னும் பலர் என்னுடன் வேலை செய்துகொண்டு, என் அன்பிற்கும் ஆர்வத்திற்கும் பாத்திரமாயிருக்கிருர்கள். மாணவர்கள் தான் எதிர்கால வாழ்வுக்கு அதிகாரிகள். ஒத்துழையாமைக் காலத்தில், கலாசாலைகளை விட்டு அவர்களை வெளியேறச் சொன்னேன். பலர் அவ்விதமே வெளியேறி, இன்றுவரை காங்கிரஸில் இருந்து

சேவை செய்து வருகிறார்கள். நாட்டிற்குப் பலனும் தங்களுக்கு உயர்வும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஒத்துழையாமைக்குப் பிறகு மறுபடியும் கலாசாலைகளை பகிஷ்காரம் செய்யும்படி இதுவரை நான் சொல்லவில்லை. ஏனெனில், நாட்டின் நிலை அவ்வித பகிஷ்காரத்திற்கு அநுசரணையா யில்லை. மேலும், இக்காலத்திய கல்வி முறை, பிரயோசனமற்றதாயும் வெறும் பொய்க் கூத்தாயும் இருந்தபோதிலும், வாலிபர்களுக்கு அதில் ஒரு கவர்ச்சி இருக்கிறது. கலாசாலைப் படிப்புத்தான் கௌரவமான சம்பாத்தியத்திற்கு வழி காட்டுகிறது. சமூகத்தில் முக்கியஸ்தர்களுடன் கலந்து பழகுவதற்கும் இதே படிப்பு இன்றியமையாததா யிருக்கிறது.அறிவை வளர்க்கவேண்டுமென்று யாருக்கும் ஏற்படக் கூடிய ஆசையையும் இக்கல்வியின் மூலம்தான் இப்போது தீர்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. தாய்மொழியை ஒதுக்கிவிட்டு, நம்முடன் எவ்விதத்திலும் ஒட்டாத அன்னிய மொழியின் மூலம் கல்வி கற்றுக் காலத்தை வீணுக்கவேண்டி யிருக்கிறதே என்று மாணவர்கள் நினைப்பதில்லை. இது ஒரு பாப காரியம் என்பதையும் அவர்கள் உணரவில்லை. நாட்டு மொழியில் நவீன அறிவையும், விஞ்ஞானக் கலைகளையும் கற்க முடியாதென்றே ஆசிரியர்களும் மாணவர்களும் முடிவு கட்டிவிட்டார்கள். ஆனால் ஜப்பானியர் எப்படி நம்மைவிடப் பன்மடங்கு அதிகமாக அறிந்திருக்கிறார்கள் ? ஜப்பானிய மொழியின் மூலம்தான் அவர்கள் கற்றிருக்கிறார்கள். சீன தேசாதிபதி சியாங் - கேஷேக் அவர்களுக்கு ஆங்கிலமே அதிகமாய்த் தெரியாது.

இந்தக் குறைபாடுகளை உத்தேசித்து மாணவர்களை நாம் மறந்துவிட முடியாது. இவர்கள்தான் எதிர்கால வாழ்வை அமைக்கும் அதிகாரிகளாக ஆகப்போகிறார்கள். இன்று பல தரப்பட்ட கொள்கையுடையவர்கள், இவர்களைச் சார்ந்து அவர்கள் அறிவைக் குழப்புகிறார்கள். வெட்டுக்கு வெட்டு, குத்துக்குக் குத்து என்னும் கொள்கையோ, அல்லது இதை

விடக் கொடுமையான பலாத்காரமோதான் அவர்களுக்குச் சுலபமாக விளங்குகிறது. இம்முறையில் ஏற்படும் பலன், பட்டாசு வெடியைப் போல் நிமிஷத்தில் மறையக்கூடியதா யிருந்தபோதிலும், உடனே கிடைத்துவிடுவதா யிருக்கிறது. ஆனால் இம்முறையின் முடிவு என்ன ? மிருக பலத்திற்கு மேலான எதையும் அறியாத விலங்குகளின் வாழ்க்கைதான் இதன் முடிவு. இன்று நடக்கும் உலகப் போரிலும் பலாத்காரத்தின் மகிமையைக் காண்கிறோம். யுத்தத்தில் ஈடுபட்டவர்கள் விலங்குகளைப் போலத்தான் நடந்துகொள்கிறார்கள். அஹிம்சையின் மேன்மையை நிமிஷத்தில் அறிந்துவிட முடியாது. அதை அறிய, பொறுமையான ஆராய்ச்சியும், கடுமையான அனுஷ்டானமும் வேண்டும். குடியானவர்கள் பேரிலும் தொழிலாளிகள் பேரிலும் எப்படியாவது ஆதிக்கம் பெற்றுவிட வேண்டும் என்று ஏன் நான் விரும்பவில்லையோ, அதே காரணத்திற்காகத்தான் மாணவர்கள் பேரிலும் எப்படியாவது ஆதிக்கம் பெற்றுவிட வேண்டுமென்பதை நான் விரும்பவில்லை. ஆனால் மாணவர்களைப் போல் நானும் ஒரு மாணவன்தான். அவர்கள் ஒரு கலாசாலையில் பயில்கிறார்கள், நான் மற்றொரு கலாசாலையில் பயில்கிறேன் : அவ்வளவுதான். அவர்கள் என்னுடைய கலாசாலையில் என்று வேண்டுமானாலும் சேர்ந்து என்னுடன் ஆராய்ச்சி செய்து பயனடையலாம். இதோ அதற்குரிய நிபந்தனைகள்:

1. மாணவர்கள் அரசியல் கட்சிகளில் சேரக் கூடாது. அவர்கள் மாணவர்கள்தான்; அறிவைத் தேடி அடைபவர்கள்; அரசியல் வாதிகள் அல்லர்.

2. அவர்கள் அரசியல் காரணங்களுக்காக வேலை நிறுத்தம் செய்யக் கூடாது. தங்கள் மனப்பான்மைக்கு ஒத்த வீரர்களை அவர்கள் லட்சிய புருஷர்களாகக் கொள்ளலாம். அந்த லட்சிய புருஷர்களின் மேன்மையான குணங்களைக் கடைப்பிடிப்பதில் மாணவர்கள் தங்கள் பக்தியைக்

காட்டவேண்டுமே ஒழிய, அன்னவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பதற்காகவோ, காலம் சென்றூர்கள் என்பதற்காகவோ, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டார்கள் என்பதற்காகவோ வேலை நிறுத்தம் செய்து தங்கள் பக்தியைக் காண்பிக்கக் கூடாது. இவ்வித சம்பவங்களினுல் அவர்கள் துக்கம் அளவு கடந்துபோய், மாணவர் அனைவரும் இதில் ஏக மனதுடையவராயும் இருந்தால், கலாசாலை அதிகாரிகளிடம் சொல்லி, கலாசாலையை அன்றைக்கு மூடச் செய்யலாம். அதிகாரிகள் ஒப்புக்கொள்ளவில்லையென்ருல், தாங்கள் கலாசாலையை விட்டு நீங்கிவிடலாம். அதிகாரிகள் தங்கள் தவறை உணர்ந்து மனத்தை மாற்றிக்கொண்டாலொழிய, திரும்பி வந்து சேரலாகாது. எக்காரணம் பற்றியும், தங்களுடன் ஒத்துழைக்காதவர்களையாவது அதிகாரிகளையாவது பலவந்தம் செய்யக் கூடாது. தாங்கள் ஒற்றுமையாயும் நேர்மையாயும் நடந்து கொண்டால், வெற்றி நிச்சயம் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

3. நூற்பது தங்கள் தருமம் என்பதை உணர்ந்து, முறையாகவும் சாஸ்திரோக்தமாகவும் அவர்கள் நூற்கவேண்டும். நூற்கும் கருவிகளை அழகாகவும், சுத்தமாகவும், ரிப்பேர் இல்லாமலும் வைத்துக்கொள்ள வேண்டும். கூடுமானுல் தாங்களே அக்கருவிகளைச் செய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும். அவர்கள் நூற்கும் நூலும் உயர்ந்த ரகமாகவே இருக்கும். நூற்றலைப் பற்றிய விவரங்கள் யாவற்றையும் தெரிந்துகொள்வதுடன், அதனுல் பொருளாதாரத் துறையிலும், சமூக சீர்திருத்தத்திலும், அரசியல் முன்னேற்றத்திலும், ஒழுக்க உயர்விலும் எவ்வளவு பயன் ஏற்படுகிறது என்பதைப் படித்து அறிந்துகொள்ள வேண்டும்.

4. எப்பொழுதும் கதரையே உடுத்தவேண்டும். கூடுமானவரை அன்னிய நாட்டுச் சாமான்களையும் மெஷினில் தயாரான சாமான்களையும் விலக்கி, கைத்தொழிற் பொருள்களையே உபயோகிக்க வேண்டும்.

5. வந்தேமாதரம் பாடுதல், தேசியக் கொடியை வணங்குதல் முதலியவற்றில் மற்றவர்களை வற்புறுத்தக் கூடாது. தேசியக் கொடி வரைந்த பொத்தான்களைத் தாங்கள் அணிந்துகொள்ளலாமே தவிர மற்றவர்கள் அணிய வேண்டுமென்று வற்புறுத்தக் கூடாது.

6. மூவர்ணக் கொடியின் தத்துவத்தை தங்கள் ஒழுக்கத்திலேயே அவர்கள் விளக்கிக் காட்டவேண்டும். வகுப்புத் துவேஷம், தீண்டாமை இவற்றிற்கு இதயத்தில் இடம் கொடுக்கக் கூடாது. இதர மதத்தைச் சேர்ந்த மாணவர்களிடமும், ஹரிஜனங்களிடமும் உடன்பிறந்த சகோதரர்களைப் போல் பழகவேண்டும்.

7. காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை செய்தல், சுற்றுப் பக்கத்திலுள்ள கிராமங்களைச் சுத்தம் செய்தல், கிராமத்துக் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் கல்வி கற்பித்தல் முதலிய தொண்டுகளில் ஈடுபடவேண்டும்.

8. ஹிந்துஸ்தானியாகிய தேசிய பாஷையை, ஹிந்தி, உருது என்ற இரண்டு உருவத்திலும் கற்கவேண்டும். அப்பொழுதுதான் எது வழங்கினாலும் அதன் மூலமே ஜனங்களுடன் கலந்து உறவாடலாம்.

9. புதிதாகத் தாங்கள் கற்கும் விஷயம் ஒவ்வொன்றையும் தாய்மொழியில் உருவமைத்து வைத்துக்கொண்டு, வாரந்தோறும் கிராமங்களுக்குச் செல்லும்போது, கிராம வாசிகளிடம் அவற்றை எடுத்துச் சொல்லவேண்டும்.

10. அவர்கள் வாழ்க்கையில் ஒளிவு மறைவு என்பது கூடாது. நடவடிக்கை சந்தேகத்திற்கு இடமின்றி அமைய வேண்டும். புலனடக்கத்தில் அமைந்த தூய வாழ்வு நடத்த வேண்டும். பயத்தை ஒழிக்கவேண்டும். மாணவர்களில் எளியோராய் உள்ளவர்களுக்கு உதவி செய்யவும், அவர்களைக் காக்கவும் தயாரா யிருக்கவேண்டும். தகராறுகளோ கலகங்களோ நேர்ந்தால் அஹிம்சை முறையின் மூலம் அவைகளைத் தீர்க்கவேண்டும். அவசியமானால் இம்முறை

யில் உயிரைச் சமர்ப்பிக்கவும் தயாராகவேண்டும். சுதந்திரத்தின் இறுதியான போராட்டம் வரும்போது, கலா சாலைகளை விட்டுவிட்டுப் போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும். நாட்டின் சுதந்திரத்திற்குத் தங்களைப் பலியாக்கிக் கொள்ளவும் தயாரா யிருக்கவேண்டும்.

11. தங்களுடன் கல்வி கற்கும் மாணவிகளிடத்தில் நேர்மையாகவும், உபசார மனப்பாங்குடனும் நடந்து கொள்ளவேண்டும்.

மேலே விவரித்திருக்கும் திட்டத்தில் ஈடுபடுவதற்கு, மாணவர்களுக்கு சாவகாசம் வேண்டும். மாணவர்கள் சோம்பலிலேயே அதிகக் காலம் கழித்துவிடுகிறார்கள். காலத்தை வீணாக்காமல், வரையறையுடன் வாழ்வதா யிருந்தால், அவர்களுக்குத் தினசரி பல மணி நேரம் நிர்மாண வேலை செய்வதற்குக் கிடைக்கும். ஆயினும் மாணவர் வாழ்வை இவ்வளவு தூரம் நெருக்கிக் கட்டுப்படுத்த நான் விரும்பவில்லை. அவர்கள், தாங்கள் கல்வி கற்பதற்காக ஒதுக்கிக்கொண்ட காலத்தைக் கொஞ்சம் நீடித்துக்கொள்ளட்டும். கலாசாலைப் படிப்புக்கு நான்கு வருஷம் செலவழிக்கலாம் என்றிருந்தால், அதை ஐந்து வருஷமாக நீட்டிப் போட்டுக் கொள்ளட்டும். இந்த ஒரு வருஷம் வீணாகி விடாது. உடல், அறிவு, இதயம் இவற்றின் அபிவிருத்தி இன்னும் அதிகமாகும். அத்துடன் சுதந்திரப் போராட்டத்திலும் நல்ல பங்கெடுத்துக்கொண்டவர்கள் ஆவார்கள்.

IV

சட்ட மறுப்புக்கும் சத்தியாக்கிரகத்திற்கும் உள்ள சம்பந்தம்

அஹிம்சையின் மூலம் சுதந்திரம் அடைவதற்கு சட்ட மறுப்பு இன்றியமையாத அம்சமல்ல. நிர்மாண வேலையில் நாட்டிலுள்ளவர் அனைவரும் பங்கெடுத்துக் கொண்டால்,

சுதந்திரம் தானாக வந்து சேரும். ஆனால் அந்த உன்னத நிலை ஏற்படுமென்று சாதாரணமாக எதிர்பார்ப்பதற்கு இல்லை. எனவே, சுதந்திரப் போராட்டத்தில் சட்ட மறுப்புக்கும் ஒரு ஸ்தானம் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது என்ன என்பதைப் பார்ப்போம்.

அதற்கு மூன்றுவித உபயோகங்கள் உண்டு:

1. குறிப்பிட்ட ஸ்தலத்திலுள்ள ஒரு குறைபாட்டை நீக்குவதற்காகச் சட்ட மறுப்பைக் கையாளலாம்.

2. குறிப்பிட்ட ஒரு குறையை நீக்குவது நம் கோரிக்கையா யிருந்தபோதிலும், பலனை எதிர்பாராது, சுற்றியுள்ளோர் உணர்ச்சியைத் தூண்டுவதற்காக, அவர்கள் மனச்சாட்சியை எழுப்புவதற்காக, தீக்குளிப்பது போலச் சட்டமறுப்பைக் கையாளலாம். சம்பாரனில் நான் சத்தியாக்கிரகம் செய்தது இம்முறையைச் சேர்ந்தது. நான் பலனை எதிர்பார்க்கவில்லை. ஜனங்கள் அலட்சியமா யிருப்பார்கள் என்பதையும் உணர்ந்தேன். எனக்குப் பலன் கிடைத்தது. ஆனால், அது அதிர்ஷ்டம், அல்லது கடவுள் அனுக்கிரகம் என்றே சொல்லவேண்டும்.

3. நிர்மாண வேலையில் பூரண முயற்சி ஏற்படாத போது, குறைவைப் பூர்த்தி செய்வதற்காகச் சட்டமறுப்பைக் கையாளலாம். இன்று நடக்கும் சத்தியாக்கிரகம் இவ்வகையைச் சேர்ந்ததுதான். இது சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பாகமான போதிலும், இதன் கோரிக்கை, பேச்சு உரிமை என்பதுதான். சட்டமறுப்பு என்பது, சுதந்திரம் போன்ற பெரிய லட்சியங்களைக் கோரிக்கைகளாகக் கொள்ள முடியாது. நாம் கோரும் விஷயம் குறிப்பிட்டதாயும், எல்லோரும் எளிதில் உணர்ந்துகொள்ளக் கூடியதாயும், எதிரிக்கு மனது வந்தால் கொடுத்துவிடக் கூடியதாயும் (அதாவது அவன் சக்திக்கு உட்பட்டதாயும்) இருக்கவேண்டும். இம்முறையைச் சரியாக உபயோகித்தால், நம்முடைய இறுதியான லட்சியமும் கிட்டிவிடும்.

சட்டமறுப்பின் லட்சணங்களையும், தத்துவார்த்தங்களையும், உபயோகங்களையும் நான் பூர்த்தியாக மேலே விவரிக்கவில்லை. நிர்மாணத் திட்டத்திற்கும் அதற்குமுள்ள சம்பந்தத்தையே நான் குறிப்பிட்டிருக்கிறேன். மேலே சொன்ன மூன்று வகைகளில், முதல் இரண்டில், சட்ட மறுப்புக்கு விஸ்தாரமான நிர்மாண வேலைஅவசியமில்லை ஆனால்மூன்றுவது வகையில், அதாவது சுதந்திரம் பெறுவதற்காகச் சட்ட மறுப்பைக் கையாளும்போது அதற்குப் பயிற்சி வேண்டும். போர் யாருக்காக எழுந்ததோ அவர்கள் விஷயத்தையும் முறையையும் நன்ருய் உணர்ந்துகொண்டு, தங்கள் முயற்சியினுல் போர்வீரர்களுக்குத் தைரியமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். சட்ட மறுப்பு என்பது சத்தியாக்கிரகிகளுக்கு ஒரு தூண்டுகோல், எதிரிக்கு அறைகூவல். இன்றைய சட்டமறுப்பில், எதிரி அரசாங்கத்தார். வாசகர்களுக்கு ஒரு விஷயம் நன்ருய் மனத்தில் பதிந்துவிட வேண்டும் : சட்ட மறுப்பின் மூலம் சுயாட்சி அடைவதென்ருல், கோடிக் கணக்கான நம் மக்கள் நிர்மாண வேலையில் ஈடுபட்டு ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறு இல்லாத சட்டமறுப்பு வெறும் சௌடால்தனம். அதனுல் ஹானிதான் உண்டாகும்.

முடிவுரை

இந்நூலை, காங்கிரஸின் சார்பாகவாவது, காங்கிரஸ் காரியாலயத்தின் கோரிக்கையின் பேரிலாவது, நான் எழுதவில்லை. சேவா கிராமத்தில் என்னுடன் தேச சேவையில் ஈடுபட்டிருக்கும் நண்பர்களுடன் நடத்திய சம்பாஷணைகளிலிருந்து இந்நூல் பிறந்தது. சட்டமறுப்புக்கும் நிர்மாணத் திட்டத்திற்கும் உள்ள சம்பந்தத்தைப் பற்றியும்,நிர்மாணத் திட்டத்தில் வேலை செய்யும் முறையைப் பற்றியும், என்னுடைய கருத்துக்களை எழுதி எல்லோருக்கும் தெரியப்படுத்த வேண்டுமென்று அவர்கள் விரும்பினுர்கள். அவர்கள்

விருப்பத்தை யொட்டி நான் இதை வெளியிட்டிருக்கிறேன். எடுத்துக்கொண்ட விஷயங்களைப் பற்றி விஸ்தாரமாகவும் பூர்த்தியாகவும் எழுத நான் உத்தேசிக்கவில்லை. நிர்மாணத் திட்டத்தின் சாயல்களையும் மார்க்கங்களையும்தான் இங்கே காணலாம்.

இதில் கண்ட விஷயங்களுக்கும் சுதந்திர இயக்கத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்கக்கூடும் என்று எண்ணி வாசகர்கள் ஏளனம் செய்யவேண்டாம். பல காரியங்களை, இதில் கண்டுள்ளவைகளைக்கூட, பலரும்தான் செய்கிறார்கள். ஆனால் அவர்கள், அஹிம்சை முறையை எண்ணியோ சுதந்திர லட்சியத்தை எண்ணியோ, அவைகளைச் செய்வதில்லை. அவைகளின் மதிப்பும் ஓரளவுதான். ஒருவர் மாஜிஸ்டிரேட்டா யிருக்கும்போது அவரை எல்லோரும் சகஜமாகவே எண்ணுகிறார்கள். ஆனால் பின்னர் அவரே கவர்னராகி, தம் பேனா முனையினாலேயே பலருடைய வாழ்க்கையை மாற்றி அமைத்துவிடக்கூடிய அதிகாரம் பெற்றிருக்கும் போது, அவருடைய மதிப்பும் பன்மடங்கு உயர்ந்துவிடுகிறது. ஒரு ஏழ்மையான விதவை சர்க்காவைச் சுற்றினால் அவளுக்கு இரண்டணா காசுதான் கிடைக்கும். ஆனால் பண்டித ஜவாஹர்லால் சர்க்காவைச் சுற்றும்போது, அது இந்திய சுதந்திரத்தைப் பெறுவதற்குரிய கருவியாக மாறிவிடுகிறது. இடம், பொருள், ஏவல் - இவை பற்றியே எதற்கும் மதிப்பு உண்டாகிறது. மதுவிலக்கு, மாதர் முன்னேற்றம் போன்ற நிர்மாண வேலைகள் சுதந்திரப் போராட்டத்தின் அம்சங்களாக நம் மனத்தில் இடம் பெறும் போது, அவைகளின் வேகமும் கவர்ச்சியும் அளவிடுவதற்கு அரிதாய் ஆகிவிடுகிறது.

இதுதான் என்னுடைய கருத்து. இது ஒரு பித்தனின் கருத்தென்றே பலர் எண்ணலாம். காங்கிரஸ்காரர்களுக்கு இதில் கவர்ச்சியில்லை என்றால் அவர்கள் என்னை ஒதுக்கி விடவேண்டும். அவர்கள் நிர்மாண வேலையைச் செய்யா

மல், என்னைச் சட்டமறுப்பு இயக்கம் நடத்தச் சொன்னால், அது பாரிச வாயுவினால் பீடிக்கப்பட்டவனிடம் பழத்தைக் கொடுத்து உரிக்கச் சொல்வது போலத்தான் முடியும்.

*தனுஷ் தக்ளி என்பது மாலைக்கயிறு இல்லாமல், ஒரு சிறு வில்லினால் கதிரைச் சுற்றும்படி செய்து நூல் நூற்கும் சிறு ராட்டினம் போன்றது. தமிழ் நாட்டுச் சர்க்கா சங்கக் கதர்க் கடைகளில் கிடைக்கும். விலை ரூ. 1.



தமிழ்க் குமரி

[பாடல்கள்]

ஆசிரியர் :

பாலபாரதி ச. து. சுப்பிரமணிய யோகி

இந்நூலில் ஏராளமான இனிய தனிப் பாடல்கள் இருக்கின்றன.

அகல்யையின் சரித்திரத்தைப் பற்றி ஒரு தனி நூலும், மேரி மக்தலேனு சரித்திரமும், பாரசீகப் பெரும் புலவர் உமர் கயாம் அருளிய ருபயாத் என்ற 101 பாடல்கள் அடங்கிய காவியத்தின் மொழிபெயர்ப்பும் இதில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

அழகிய பதிப்பு. விலை ரூ. 1—12—0

தபால் செலவு 4 அணு

ஒரு நற்செய்தி

மகாத்மா காந்தியின் வேண்டுகோளின்படி ஸ்ரீ ஸதீச் சந்திரதாஸ் குப்தா அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியுள்ள '**Home & Village Doctor**' என்ற உயர்ந்த வைத்திய நூல் தமிழில் தயாராகிறது. மூலம் 1500 பக்கம் கொண்டது.

ஒவ்வொருவரும் தாமே படித்து, எளிதில் புரிந்துகொண்டு, தாமாகவே வைத்திய சிகிச்சை செய்துகொள்ள உதவியாகும் அரிய நூல்.

நமது மாஜி சுகாதார மந்திரி டாக்டர் ராஜன் அவர்களின் மொழிபெயர்ப்பு.

மற்ற விவரங்கள் பின் அறிவிக்கப்படும்